# வாழ்வை புனிதம், அமைதி மற்றும் தெய்வீகமயமாக்கும் கலைகள்

புனிதமில்லா நிலையில் இருந்து புனிதமாகவும், உலகீய உணர்வில் இருந்து ஆன்மீகமாகவும், சாதாரண நிலையில் இருந்து தெய்வீகமாகவும், பாவ அழுக்கில் இருந்து பரிசுத்தமாகவும், போக நிலையில் இருந்து யோக நிலையாகவும் முறையற்ற, அமைதியற்ற சஞ்சலமுள்ள நிலையில் இருந்து அமைதி நிறைந்த, ஒரே சீரான நிலையாகவும் வாழ்க்கையை மாற்றி அமைப்பதற்கு சில விதிமுறைகள் இந்தக் கட்டுரையில் தரப்பட்டுள்ளன. அவ்வப்போது பரமபிதா பரமாத்மா சிவபாபா அவர்கள் தமோபிரதான வாழ்வினுடைய குறைகள், தவறுகள், தீயஎண்ணங்கள் முதலியவைகளில் இருந்து விடுபடுவதற்காக பிரஜாபிதா பிரம்மா மூலமாக என்னென்ன விலைமதிப்பற்ற உத்திகளை சொன்னாரோ, அவைகளைக் குறித்து ஆழ்ந்த சிந்தனை செய்து அவைகள் இங்கே பல்வேறு அம்சங்களில் விவரிக்கப்பட்டுள்ளன. பிரஜாபிதா பிரம்மா அவர்களின் வாழ்க்கையில் என்னென்ன சிறப்பம்சங்கள் என் கண்ணில் பட்டதோ, அந்த எண்ணற்ற சிறப்பம்சங்களில் இருந்து மிகச் சிறந்த சில சிறப்பியல்புகள் மற்றும் திறமைகள் இங்கே எளிதாக விவரிக்கப்பட்டுள்ளது. இவ்வனைத்திலிருந்தும் ''வாழ்வை வாழும் கலை''க்கான போதனைகள் கிடைத்து விடுகின்றன. இவைகள் வாழ்க்கையை முழுமை மற்றும் நிறைவை நோக்கி அழைத்துச் செல்லும் விலைமதிப்பற்ற உத்திகளாக திகழ்கின்றன. இவைகள் மனிதனது சிந்தனைகள், ஆச்சாரங்கள், விவகாரங்கள் முதலியவற்றை அழகாகவும், கவர்ச்சியுடையதாகவும், மனதிற்குகந்ததாகவும், வளர்ச்சியை நோக்கியும், பிரபாவத்தை ஏற்படுத்துவதாகவும் மாற்றிவிடுகிறது. இந்த அர்த்தத்தில் இவைகள் இந்த கட்டுரையில் 'கலைகள்' என்று சொல்லப்படுகிறது. ஏனென்றால் 'கலை' என்ற வார்த்தையானது எந்தவொரு பொருளையோ, செயலையோ அல்லது நபரையோ அழகாகவும், பொலிவாகவும், கவர்ச்சிகரமாகவும் ஆக்கக்கூடிய திறமை மற்றும் நிபுணத்துவத்தின் வாசகமாக இருக்கிறது எனினும் இங்கு சொல்லப்படும் உத்திகள் வாழ்க்கையை அப்படி உருவாக்கக் கூடியவைகளாக இருக்கின்றன.

இந்தி மற்றும் சமஸ்கிருதத்தில் 'கலை' என்ற வார்த்தைக்கு பல அர்த்தங்கள் தரப்பட்டுள்ளன. தற்போதுகூட 'கலை' என்ற வார்த்தை சுமார் 30 வித அர்த்தங்களில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. (1) எந்த செயலையும் சரியானபடி சிறந்த வகையில் செய்யும் திறமை, (2) உத்தி, முறை (3) வேகம் (4) அழகு, புகழ், நிபுணத்துவம்(5) ஜோதி, பிரகாசம் (6) பாவனையை வெளிப்படுத்தும் அழகிய வழிகள் – வரையும் கலை, சிற்பக்கலை, நாட்டியக்கலை, நாடகக்கலை முதலியவைகள், வேலைத்திறன், சாதுரியம், கைவினை. பாரதத்தின் பழமையான கிரந்தங்களில் இவ்விதமான கலைகளின் எண்ணிக்கை 60 ஆக உள்ளது. (7) சந்திரனின் 16வது பகுதி (a digit of moon ; moon has 16 digits) (8) பகுதி, அம்சம் முதலியவைகள். பெரும்பாலும் இந்த அர்த்தங்களில் அந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மேலே கூறப்பட்டுள்ள அர்த்தங்களில் சில வகைகள் பரஸ்பரம் தங்களுக்குள் நெருங்கிய தொடர்பு உடையவைகளாக இருப்பதால் அவைகளை எல்லாம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். அவைகள் (1) எந்தவொரு செயலையும் சரியானபடி நியமத்தோடு, கூர்மதி அல்லது நிபுணத்துவத்தோடு செய்யும் திறமை. மேலே என்னென்ன அர்த்தங்கள் தரப்பட்டதோ, அதில் முதல் 5 அர்த்தங்கள் இதற்குள் வருகிறது (2) அழகிய வடிவில் மனோபாவனையை வெளிப்படுத்தும் திறமை. இதில் வண்ணம் தீட்டும் கலை, நாடகக்கலை முதலியவைகள் இடம் பெறுகின்றன. மேலே சொல்லப்பட்ட 6 வது எண் இதில் வருகிறது. (3) சந்திரனின் பதினாறு பாகத்தில் ஒரு பாகம் அதாவது ஒரு அம்சம். நிலவு பௌர்ணமி வரை நாளுக்குநாள் ஒவ்வொரு அம்சமாக வளர்கிறது பிறகு அமாவாசை வரை அதன் அளவு ஒவ்வொரு நாளும் ஒரு அம்சம் குறைகிறது. அதன் அடிப்படையில் வாழ்க்கையில் ஜோதி, வெளிச்சம், குணம், நிபுணத்துவம் முதலியவைகள் எத்தனை அம்சம் அதிகரிக்கிறதோ, அதனை அத்தனை அளவு வளரும் கலை என்றும் எத்தனை அம்சம் குறைகிறதோ அதனை அத்தனை அளவு தேயும் கலை என்றும் சொல்லப்படுகிறது. மேலே சொல்லப்பட்ட 7 வது மற்றும் 8 வது எண்கள் இதற்குள் வருகிறது.

இந்தக் கட்டுரையில் ‘கலை’ என்ற வார்த்தையின் உபயோகம் முதல் வடிவில் அனைவருக்கும் தெரிந்த அர்த்தத்தில் தரப்பட்டுள்ளது. அதன் பகுதி வடிவில் அதாவது அலௌகீக மற்றும் மறைமுக வடிவில் மற்றொரு அர்த்தமும் வரவே செய்கிறது ஏனெனில் நமது ஒவ்வொரு செயலிலும், பேச்சிலும், வாழ்க்கை முறையிலும் கலைநயத்தையும், அழகையும், பிரபாவத்தையும் கொண்டுவரும்படி நமது விவகாரம் மற்றும் பாவனைகளில் அந்த அளவு நிபுணத்துவமும் வளர்ச்சியும் வந்து சேர்கிறது. இந்த முயற்சியின் பலனானது ஆத்மாக்களாகிய நமது ஜோதி, வெளிச்சம் மற்றும் புனிதத்தை மேலும் மேலும் அதிகமாக்கி அந்த அளவு நிறைவாக்குகிறது. அதாவது சந்திரன் எப்படி பௌர்ணமி அன்று 16 கலைகள் முழுமை பெற்று இருக்கிறதோ அதேபோல நமது தெய்வீக தன்மைகளும் 16 கலைகள் நிறைவாக அதாவது சம்பூரண தேஜோமயமாகி விடுகிறது. இந்த அர்த்தத்தில்தான், தமது முந்தைய பிறவியில் செய்த முயற்சியின் பலனாக ஸ்ரீகிருஷ்ணர் ‘பதினாறு கலைகள் நிறைந்தவர்’ என்றும் ஸ்ரீராமர் ‘பதினான்கு கலைகள் நிறைந்தவர்’ என்றும் சொல்லப்படுகிறது. ஸ்ரீகிருஷ்ணருடைய வாழ்வு முயற்சி செய்யும் வாழ்வாக இருக்கவில்லை ஆனால் அது பிராப்தி மேலும் பலனை அனுபவிக்கும் வாழ்க்கையாக இருந்தது. ஸ்ரீகிருஷ்ணர் அல்லது நாராயணர் ஆவதற்கு முன்பாக அவர் முயற்சி செய்யக்கூடிய மனிதராக வாழ்ந்து வந்தார். இந்த அர்த்தத்தில்தான் ஸ்ரீகிருஷ்ணரிடம் தெய்வீக குணங்களின் முழுமையான பிரகாசம் இருந்தது ஆனால் இராமரிடம் பதினான்கு கலைகள் மட்டுமே இருந்தது. ஆனாலும் சில பக்தர்கள் ஸ்ரீகிருஷ்ணரிடம் நடனக்கலை, பேச்சுக்கலை முதலிய கலைகளின் சாதுரியம் இருந்ததால் அவரை “பதினாறு கலைகள் நிறைந்தவர்” என சொல்கிறார்கள், அது தவறு. ஸ்ரீகிருஷ்ணரிடம் அனைத்து தெய்வீக குணங்களும் முழு அளவில் வளர்ச்சி பெற்று இருந்தது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால் அவர் முழுமையாக மலர்ந்த மலரைப்போல இருந்தார். அவரது அழகின் மிளிர்வு பதினாறு கலைகள் நிறைந்த சந்திரனைப்போல வளர்ந்து இருந்தது. எனினும் சொல்லப்பட்டது போல, ஆண் ‘ஸ்ரீநாராயணர்’ ஆகவும் பெண் ‘ஸ்ரீலஷ்மி’ ஆகவும் உயர்வு பெறுவதற்கான உத்திகளை இந்த கட்டுரையில் விவரித்திருக்கிறோம் அதாவது அவர்கள் இதன் பலனாக பதினாறு கலைகள் நிறைந்தவராக முடியும்.

இதனை எனக்குள் பயிற்சி செய்ததன் பலனாக எனக்கு என்னென்ன அனுபவங்கள் கிடைத்ததோ, அதன் ஆதாரத்தில் நான் நிச்சயமாக சொல்வது என்னவென்றால் இவைகளை பயிற்சி செய்வதன் மூலமாக மனம் சலனமற்றும், சிந்தனை நல்லதாகவும், நிர்ணயம் தெளிவாகவும், சித்தம் ஒருமுகமாகவும், மகிழ்ச்சியாகவும், புத்தி கூர்மையாகவும், ஸ்திதி நிலையாகவும், வாழ்க்கை தெய்வீக குணங்களின் மணம் வீசுவதாகவும் மேலும் பிறரோடு நடந்து கொள்ளும் விதம் சிறப்பாகவும் ஆகிவிடும் என்பது திண்ணம்.

-பிரம்மாகுமார் ஜகதீஷ் சந்தர்

# வாழ்வின் பதினாறு கலைகள்

எந்தவொரு செயலைச் செய்வதாக இருந்தாலும் அதற்கென்று ஒரு நேரமும் செய்யும் முறையும் இருக்கிறது. எனினும், அந்த செயலை சரியான இடத்தில், உகந்த சூழ்நிலையில் நேர்த்தியான முறையில் செய்வதற்கு தகுந்த அறிவு அவசியமாகிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், ஒவ்வொரு செயலைச் செய்வதும் ஒரு கலையாக இருக்கிறது. ஓவ்வொரு கலைஞரும் கலைநயத்தோடு, எந்த வண்ணத்தை எங்கு தீட்ட வேண்டும் கண், காது ஆகியவைகளை எவ்விதத்தில் உருவாக்க வேண்டும் மேலும் காட்சிகளை எப்படி அமைக்க வேண்டும் அல்லது கை-கால்களை எவ்விதத்தில் காட்ட வேண்டும் என்பதை அறிந்திருக்கிறார்கள். இந்த வண்ணங்கள், முறைகள், நிலைகள் மற்றும் வரைமுறைகள் ஆகியவை அவரது கலையில் அவசியம் இடம் பெற்றிருப்பதைக் காணலாம். அதேபோல வாழ்க்கையும் ஒரு கலையாக இருக்கிறது.

இருபக்கமும் ஊன்றப்பட்டிருக்கும் மூங்கில் கழிகளுக்கிடையே கயிற்றைக் கட்டி அதன் மீதேறி தனது கலைத்திறத்தை காட்டும் கழைக்கூத்தாடிகளைப் பற்றி நம் அனைவரும் அறிந்திருக்கிறோம். கயிற்றின் மீது நடக்கும்போது ஒரு பக்கம் அதிகமாகவோ அல்லது மறுபக்கம் அதிகமாகவோ சாய்ந்து விடுவதில்லை. அதாவது தனது நிலையை எப்போதும் சமமாக வைத்திருக்கிறார். ஒருவேளை அவர் தனது நிலையை சமமாக வைத்திருக்க வில்லை என்றால் கீழே விழ நேரிடும் அதோடு பலத்த காயங்களும் ஏற்படும். அவர் அந்த செயலைச் செய்யவில்லை என்றால் அதாவது எந்த வித்தையையும் காட்டவில்லை என்றால் அவரை கழைக்கூத்தாடி என்று யாரும் சொல்லவும் மாட்டார்கள் மேலும் அதனை அவரது வாழ்வாதாரமாகவும் ஆக்க முடியாமல் போய்விடும். அதைப்போலவே மனித வாழ்க்கையும் ஒரு கலையாகும். மனிதர்கள் தங்கள் பிள்ளைச் செல்வங்களோடு வாழ வேண்டும், அவர்களுக்கு அன்பு காட்ட வேண்டும் ஆனால் மோகமில்லாமல் இருக்க வேண்டும், அவர்கள் செல்வம் சம்பாதிக்க வேண்டும் ஆனால் அதன்மீது ஆசை இல்லாமல் இருக்க வேண்டும், அவர்கள் இல்லறத்தை பராமரிக்க வேண்டும் ஆனால் அதன்மீது பற்று இல்லாமல் இருக்க வேண்டும். அதற்காக ஒரு அழகிய வரை-முறை, கடமையைச் செய்வதற்கான ஒரு நல்ல விதிமுறை, இல்லறத்திற்கான ஒரு அழகிய நடைமுறை மேலும் திட்டங்கள் இருக்கின்றன. அதனால்தான் வாழ்க்கை கூட ஒரு ‘கலை’ எனச் சொல்லப்படுகிறது.

உண்மையில் மனிதர்களுடைய காரிய விவகாரங்களை அழகாகச் செய்வதற்கும், வாழ்வை சீரோடும், சிறப்போடும் நடத்துவதற்கும் உரிய விஞ்ஞானமாகத் திகழ்வது யோகமே. எனவேதான் யோகத்தை ‘வாழ்க்கைக்கலை’ என்று சொல்லப்படுகிறது. அதாவது மனிதன் வாழவேண்டும் என்றால் எப்படி வாழவேண்டும், செயல் செய்ய வேண்டுமென்றால் எப்படி செய்ய வேண்டும், இதற்கான சூத்திரத்தை யோக வடிவ விஞ்ஞானமே தருகிறது. வாழ்க்கையை வெற்றிகரமாக வாழ அல்லது சிறந்ததாகச் செய்ய பதினாறு கலைகள் முக்கிய இடம்பெற்றிருப்பது அனைவரும் அறிந்ததே. யோகமானது மனிதர்களை இந்த பதினாறு கலைகளால் நிறைவு பெறச் செய்கிறது. அந்த பதினாறு கலைகள் எவையெவை, மேலும் யோகமானது மனிதர்களை அந்தக் கலைகளில் எப்படி பரிணமிக்கச் செய்கிறது என்பதை இப்போது காண்போம்.

# 1. எல்லோரையும் நண்பர்களாக்கும் கலை
## (The art of winning friends)

மற்றவர்களை நண்பர்களாக்கும் கலை ஒரு மிகப்பெரிய கலையாகும். பெரும்பாலான மனிதர்கள் தங்களிடமுள்ள குறைகளின் காரணமாக பிறரை விரோதிகளாகச் செய்து விடுகிறார்கள். அதன் விளைவாக மானசீகமாக அமைதியை இழப்பதோடு பிறரது வெறுப்பையும் விலைகொடுத்து வாங்கி விடுகிறார்கள். பிறரை நண்பர்களாக்குவதற்கு (1) பிறர் மீது தூய்மையான அன்பு (2) இணக்கமாக இருக்கும் சுபாவம் மற்றும் வளைந்து கொடுக்கும் தன்மை (3) சரள சுபாவம் அதாவது தூய்மையான மற்றும் நேர்மையான உள்ளம் (4) புனிதமும் மேன்மையும் நிறைந்த வாழ்க்கை (5) சாந்த குணம், இனிமை மேலும் மதிப்பளிக்கும் குணம் (6) அருகில் இருப்பவரோடு பழகும் குணம் (7) பிறருக்காக எப்போதும் உழைக்கும், உதவும் குணம் (8) பிறரை கடுமையாக விமர்சிக்காமல் இருப்பது மேலும் அவர்களிடம் அட்டகாசம் செய்யாமல் இருப்பது அதாவது அவருக்குரிய மதிப்பும் மரியாதையும் அளிப்பதோடு அவரது விசயங்களை தன் மனதிற்குள்ளேயே வைத்திருப்பது (9) பிறருக்காக தனது சுகத்தையும், வசதிகளையும் கூட தியாகம் செய்ய ஆர்வமுடன் இருப்பது ஆகிய ஒன்பது முக்கிய பண்புகள் அவசியம் மனிதனிடத்தில் இருக்க வேண்டும்.

விரோதியை நண்பனாக்க அன்பே ஒரு மந்திரமாக வேலை செய்கிறது. அதாவது ஒரு மனிதனின் உள்ளத்தை மற்ற மனிதரின் உள்ளத்தோடு தன்னிச்சையாக இணைக்கும் கயிற்றின் வேலையைச் செய்கிறது. ஆனால் அவன் எப்போது தேகம் மற்றும் தேகத்தின் சொந்தங்களில் இருந்தும் மற்ற அனைத்து பொருட்களின் ஆசையில் இருந்தும் விடுபட்டு அன்புக்கடல் பரமாத்மாவின் அன்பு மழையில் நனைந்து, தன்னை அந்த அன்பே வடிவான பரமாத்மாவின் குழந்தை என்ற நம்பிக்கை கொண்டு அன்பு வடிவாகி பிறரோடு மனதார பழகுகிறானோ அப்போதே அவனிடத்தில் உண்மையான, தூய்மையான அன்பு தோன்றும். ஆனால் பரமாத்மாவிடம் அன்பு செலுத்துவது மேலும் பரமாத்மாவின் குழந்தைகளிடமும் அதாவது ஆத்மாக்களிடமும் அன்பு காட்டுவதுகூட யோகத்தின் ஒரு பகுதியாகவே உள்ளது. இப்படியாக, எப்போது மனிதர்கள் பிறரது அவகுணங்களைப் பாராமல் அவர்களது நற்குணங்களையே பார்த்து அவர்களிடம் அன்பு செலுத்துகிறார்களோ மேலும் ''ஆத்மாக்கள் அனைவரும் சகோதரர்கள்'' என்ற உறவை ஏற்றுக் கொள்கிறார்களோ அப்போதே பிறரோடு சேர்ந்து பழகுவதுகூட சாத்தியமாகிறது. மேலும், எப்போது மனிதர்கள் தனது எண்ணமே சரியானது என எப்போதும் அடம்பிடிக்காமல் இருக்கிறார்களோ மேலும் பிறரது கருத்துகளுக்கும் உரிய மதிப்பளிக்கிறார்களோ அதாவது எவ்வித அபிமானமும் இன்றி பிறரிடம் நடந்துகொள்கிறார்களோ அப்போதே பிறரோடு ஒட்டி உறவாடுவது நிலையாக இருக்கும். இந்த எல்லா விஷயங்களுமே யோகத்தின் மூலமாகவே சாத்தியமாகிறது. யோகத்தின் மூலமாகவே மனிதர்கள் தங்களுக்குள் ஒத்த கருத்துடன் இருக்கிறார்கள். யோகத்தின் அர்த்தமே, ஒன்றுசேர்வது அதாவது இணைந்து ஒருணர்வைப் பெறுவது. அதன்பிறகு மனதின் சரளத்தன்மை, உண்மை, நேர்மை முதலிய குணங்கள் உறவை உறுதி செய்ய அவசியமாகிறது அதுவும் யோகியிடமே ஏற்படுகிறது. போகி அதாவது யாரிடம் காமம், பேராசை, சுயநலம் முதலிய உணர்வுகள் நிறைந்திருக்கிறதோ அவர்களுடைய மனதில் உண்மையும், நேர்மையும் எங்கே இருக்கும்? மேலும் எங்கே உண்மை இல்லையோ அங்கே உண்மையான நட்பு எப்படி உருவாகும்?

இதற்கு மேலும், மனித வாழ்வில் புனிதம் மேலும் சாந்த சுபாவம் இருக்கும்போது அது அவரை எல்லோருக்கும் பிடித்தவர் ஆக்குகிறது. ஆனால் எப்போது சாந்த சொரூப பரமாத்மாவின் நினைவில் நிலைத்து இருக்கிறாரோ மேலும் யோகத்தின் மூலம் தனது பாவ அழுக்குகள் நிறைந்த சமஸ்காரங்களை துவைக்கிறாரோ அப்போதே அமைதியும், புனிதமும் அவரது வாழ்வில் மலர முடியும். இவ்விதமாக பிறரை நண்பர்களாக்குவதற்கு மற்ற பிற அவசியமான தகுதிகளும் விவரிக்கப்பட்டுள்ளன. அவைகளும்கூட யோகத்தின் மூலமாகவே மனித வாழ்வில் கடைபிடிக்க முடிந்ததாகிறது. உண்மையான சேவை உணர்வையும்,

பிறருக்காக தியாகம் செய்யும் எண்ணத்தையும் யோகமே மனிதனிடத்தில் உருவாக்குகிறது. ‘சகயோகம்’ என்ற வார்த்தை யோகம் என்ற வார்த்தையில் இருந்தே உருப்பெற்றிருக்கிறது மேலும் யோக நிலையில் உள்ள மனிதர்களே தங்களது வாழ்வை பிறரது நன்மைக்காக அர்ப்பணிக்கிறார்கள்.

## 2. பிறரோடு பழகும் கலை அல்லது பிறரை மகிழ்விக்கும் கலை

**(The art of dealing with others or pleasing others)**

மனித வாழ்வு உண்மையில் எப்படி இருக்க வேண்டும் என்றால் அது பிறருக்கு சந்தனத்தைப் போல குளிர்ச்சி தருவதாகவும், ரோஜா மலரைப்போல நறுமணம் தருவதாகவும், தேனைப்போல இனிமை தருவதாகவும் மற்றும் பழங்களைப்போல சுவையான சாறு தருவதாகவும் இருக்க வேண்டும். எனினும் இதற்கு பிறர் மகிழ்ச்சியும், திருப்தியும் அடையும்படி தனது நடத்தையை அழகும், திறமையும் மிக்கதாகச் செய்ய வேண்டும். இது கூட ஒரு கலையே. ஆனால் மனிதன் தனது வாழ்க்கை மூலம் உலகிற்கு பிரியமானவராக அதாவது மனிதர்களுக்கு உற்றவராக விளங்க வேண்டும் என்றால் அவரிடத்தில் இந்த ஆறு விசயங்கள் முக்கியமாக இருக்க வேண்டும் (1) அடுத்தவர் வாழ்வையும் விலைமதிப்பற்றதாக உணரவேண்டும் மேலும் பிறருக்கு தீங்கிழைத்தல் மற்றும் நட்டத்தை ஏற்படுத்துதல் முதலிய செயல்களைச் செய்யாமல் அவர்களை பராமரித்தல் ஆதரவு காட்டல், புகலிடம் தருதல், சுகமளித்தல் முதலியவைகளுக்காக முழுமையாக முயற்சி செய்ய வேண்டும் (2) பிறரது மனவுணர்வுகள், சுபாவங்களை புரிந்துகொண்டு அதாவது அவரது சமஸ்காரங்கள் மற்றும் சூழ்நிலைகளை அறிந்துகொண்டு அவரிடம் தோழமை, தயாளம், நல்லுணர்வு மற்றும் அன்பை அதிகரிக்க வேண்டும் (3) தான் ஒருபோதும் யாருக்கும் சுமையாக இருக்கக்கூடாது என்பதும் தான் யாரிடமும் எவ்விதமான சேவையும் பெறக்கூடாது என்ற இலட்சியமும் எப்போதும் தன் முன்னே இருக்க வேண்டும் (4) நான் பிறருக்கு துன்பம் இழைத்தேன் என்றால் நான் துக்கத்தோடு மரணமடைய வேண்டும் என்ற கருத்தை நினைவில் கொள்ள வேண்டும் (5) எல்லோருக்கும் நல்லதையே நினைப்பவராக இருக்க வேண்டும் (6) தன் கடமையைச் செய்யவேண்டும் அதாவது பொறுப்போடு நடந்துகொள்ள வேண்டும்.

இப்போது பார்த்தோமென்றால், அடுத்தவர் ஒருவர் நமது நன்மைக்காக கொஞ்சம் சிந்திக்கிறார், நம்மிடம் நிறைய தகுதிகள் இருப்பதாக உணர்கிறார், நமது வாழ்விற்கும் மதிப்பு, மரியாதை உண்டு என நினைக்கிறார் என்றால் அவர்மீது மட்டற்ற மதிப்பு ஏற்பட்டுவிடும். எனினும் அடுத்தவர் வாழ்வும் விலைமதிப்பற்றதே அல்லது விலைமதிப்பற்றதாக ஆக்க வல்லதே என்பதை எவரால் ஏற்க முடியும் என்றால், யார் யோகத்தின் மூலமாக உண்மையான சுகத்தை சம்பாதித்து, அதனை அனுபவத்தின் ஆதாரத்தில் அறிந்திருக்கிறாரோ அவரே பிறரது வாழ்வும் வைரம் போன்றதே என்பதை ஏற்பார். எப்படி உடன்பிறந்த சகோதரன் தனது சகோதரனை உயர்த்துவதற்கு எப்போதும் ஆவன செய்கிறாரோ, அதுபோலவே பரமாத்மாவை தந்தை வடிவில் நினைவு செய்பவர்கள், உண்மையான யோகிகளாக இருந்து தனது ஆன்ம வடிவ சகோதரர்களின் வாழ்வையும் முன்னேற்றுவதற்கு முயற்சி செய்வார்கள். நல்லதை நினைப்பதும் நல்லதை செய்வதும் யோகிகளின் செயல். எனவே அவர்கள் சரியான வகையில் பிறருக்கு நல்லதையே நினைப்பவர்களாக இருக்கிறார்கள். கருணை உள்ளம் மற்றும் தயாள குணமுடய பகவானோடு உறவிருப்பதால் அவர்கள் பிறருடைய சமஸ்காரங்கள் அல்லது சூழ்நிலைகளை அறிந்திருந்தபோதும் அவர்கள் மீது நன்மை உண்டாகும் எண்ணத்தையே நினைக்கிறார்கள். யோகம் மட்டுமே மனிதவாழ்வை உலகத்திற்குகந்த அதாவது மனிதர்களுக்கு திருப்தி தரக்கூடிய அதாவது உலகிற்கு பிரியமானவராக ஆக்கக்கூடிய ஒரு கலையாகத் திகழ்கிறது என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி உறுதியாகக் கூறமுடியும்.

## 3. மாற்றத்தையும் வளர்ச்சியையும் கொண்டுவரும் கலை (The art of reforming, refreshing and developing)

தன்னுடைய வாழ்க்கையில் மாற்றத்தைக் கொண்டு வரத் தெரியாத மனிதர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு தங்களது சமஸ்காரத்தை மாற்றுவதற்கான கலை வருவதில்லை. விரும்பியபோதும் அவர்கள் தங்கள் சுபாவத்தை மாற்ற முடிவதில்லை. அதனால் அவர்கள் எப்போதும் துன்பத்தால் சூழப்பட்டிருக்கிறார்கள். ஆனால் யோகமென்பது அப்படிப்பட்ட ஒரு கலையாக இருக்கிறது, அதன்மூலம் மனித வாழ்வு உயரும் கலையாக ஆகிவிடுகிறது. யோகியின் முன்பு வாழ்க்கையின் இலட்சியம் எப்போதும் தெளிவாக இருக்கிறது. அதனால் அவர் இலட்சியத்தால் கவரப்பட்டு அதற்குரிய இலட்சணங்களை தன் வாழ்வில் கடைபிடிக்கிறார். அவருக்கு வாழ்க்கையின் இலக்கும், பாதையும் நினைவில் நிற்கிறது. அதனால் அவரது ஒவ்வொரு அடியிலும் மாற்றமும், ஏற்றமும் ஏற்படுவதோடு கூட கோடி மடங்கு வருமானமும் கிடைக்கிறது. அவரது மனக்கண் முன்னால் பரிஸ்தாவின் முகமும், ஸ்ரீநாராயணரின் முகமும் அடிக்கடி வலம் வருகிறது. அதனால் எப்போதும் அவர் அப்படிப்பட்ட குணநலன்களை உருவாக்கும் முயற்சியிலேயே ஈடுபட்டிருக்கிறார். அதில் அவரது நாளும் பொழுதும் வெற்றிகரமாகிறது. ஏனெனில் ‘மனிதன் தன்னை எப்படி நினைக்கிறானோ அப்படியே ஆகிறான்’ என்பது பழமொழி (As you think so shall you become).

தான் சட்டத்தை உருவாக்கும் (Law-maker), அமைதியை உருவாக்கும் (Peace-maker) பரமாத்மாவின் குழந்தை என்பது எப்போதும் யோகியின் மனதில் இருந்து வருகிறது. அதனால் அவர் தான் ஒருபோதும் சட்டத்தை மீறி (Law-breaker) அதாவது சட்டத்திற்கு முரணாக எதையும் செய்யக்கூடாது என்பதையும், அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடாது என்பதையும் அறிந்திருக்கிறார். மாறாக அவர் தன்னை அமைதியின் தூதுவராகக் கருதி அதைக் கடைப்பிடிக்கிறார். எனவே அவர் மாயைக்கு வசமாவதில்லை. “நான் ஈஸ்வரிய குலத்தைச் சேர்ந்தவன். எனவே நான் எவ்வித அசுரச் செயலையும் செய்யக்கூடாது” என்ற விசயத்தின் மீது அவருக்கு கவனம் இருக்கிறது. எந்த மனிதன் யோகியாக இல்லையோ அவரிடம் தான் பரிஸ்தாவாகவோ அல்லது தேவ-தேவியாகவோ ஆகவேண்டும் என்ற இலட்சியம் எதுவும் இருப்பதில்லை. ஈஸ்வரிய விதிப்படி, முறைப்படி அல்லது சட்டப்படி செயல்படுவதற்கான முயற்சியும் இருப்பதில்லை. அப்படி இருக்கும்போது அவர் தன் வாழ்வில் மாற்றத்தை எப்படி கொண்டுவர முடியும்? அவரோ காமம், கோபம் முதலிய இயற்கைக்கு மாறான சமஸ்காரங்களுக்கு வசமாக இருந்து வருகிறார் மேலும் நாளுக்கு நாள் அவரது நிலை தாழ்ந்து கொண்டே போகிறது. அவரது மனதில் யோகியைப் போன்று உண்மையான, நிலையான அமைதி இருப்பதில்லை. அதனால் அவர் பிறரை புத்துணர்வு பெறச் செய்யவும் முடிவதில்லை. அவரது வாழ்வில் புதுமை எதுவும் வருவதில்லை அதோடு அவர் பழைய சம்பிரதாயத்தின்படியே நடந்து வருகிறார். அதனால் அவர் பிறரிடத்தில் மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் மற்றும் எழுச்சியையும் கொண்டுவர முடிவதில்லை. மேலும் பிறருடன் வளைந்து கொடுத்தும் வாழ முடிவதில்லை. யாருடைய வாழ்வில் மாற்றம் இல்லையோ அவர் பிறரது வாழ்வில் ஏற்றத்தைக் கொண்டுவர முடியாது.

யாரிடத்தில் முக்கியமாக இந்த ஆறு விசேசங்கள் இருக்கிறதோ அவரே மற்றவர் வாழ்வில் மாற்றத்தை கொண்டுவர முடியும். அவைகள் (1) பிறரது நல்லவைகளையே பார்ப்பது மேலும் அந்த நன்மைகளை மனதில் இருத்தி அவைகளை நல்ல செயல்களில் ஈடுபடுத்தி அவைகளை வளரச் செய்து அவரது கெட்டவைகளை அகற்றிக் கொண்டே போவது (2) பிறரை தன்னுடன் சேர்த்துக்கொள்வது, அன்பால் அவரை தன்னுடையவராக்கிக் கொள்வது, தனக்குள் அவரைக் குறித்த நம்பிக்கையை ஏற்படுத்தி, அவருக்கு அன்பு காட்டி, அவரது அவகுணத்தை நேசமுடன் நீக்குவது (3) அவரை தன்னைவிட முன்நிலையில் நிறுத்துவது (4) அவரது நற்செயலை சரியாக புகழ்ந்து பேசி ‘ஆஹா ஆஹா’ எனப் பாராட்டி, தைரியமூட்டி மேலும் முன்னேற தூண்டிவிடுவது (5) தனது உயர்ந்த சிந்தனை மூலம் பிறரது

உள்ளம் உணரும் வண்ணம் அவரது சிந்தனையை திருப்புவது (6) தனது ஒவ்வொரு செயலிலும் அலௌகீகத் தன்மை மிளிர்வதன் மூலம் பிறரையும் அலௌகீகமாக மாற்றுவது.

நான் எனது இந்த சமீபகால வாழ்க்கையில் பிதாஸ்ரீ அதாவது பிரஜாபிதா பிரம்மா அவர்களின் வாழ்க்கையில் இந்த எல்லா விசேசங்களையும் பார்த்ததோடு அவைகளை அனுபவமும் செய்திருக்கிறேன். சொல்லப்போனால் இந்த கலியுக உலகில் ஒவ்வொரு ஆண் அல்லது பெண்ணின் வாழ்விலும் நடுநிசி கருமேக இருள் சூழ்ந்துள்ளது எனினும் அந்த மேகத்தின் இருட்டிடையே சிற்சில வெளிச்சத்தின் கதிர்களும் நிச்சயம் காணப்படவே செய்கிறது. பிதாஸ்ரீ அவர்கள் ஒவ்வொருவரிடமும் உள்ள நற்குணங்களை கவனத்தில் வைத்திருந்தார். அவைகளின் அடிப்படையில் ஒவ்வொருவருடைய வாழ்வையும் யோகம் நிறைந்ததாக்குவதில் ஈடுபட்டிருந்தார். அனைவரையும் பார்த்து பார்த்து உருவாக்கினார். பிறகு அவர்களிடம் சிறு வெற்றி ஏற்பட்டாலும் அதை புகழ்ந்து பாராட்டி அவர்களை முன்னேறச் செய்வதில் ஈடுபட்டிருந்தார். ‘இந்த விசயத்தில் இவர் என்னை விட முன்னால் இருக்கிறார்’ என்று கூட சொல்லி பாராட்டியிருக்கிறார். இவ்விதமாக தனது அன்பின் ஆதாரத்தில் அவர் நல்லுணர்வின் உத்தியால் பிறரது வாழ்வில் வெகுவிரைவில் மாற்றத்தைக் கொண்டுவரும் கலையில் தேர்ந்தவராயிருந்தார் ஏனெனில் தானே அவர் அந்த யோகக் கலையின் அனுபவம் பெற்றவராக வாழ்ந்து வந்தார்.

எந்த மனிதர் யோகியாக இல்லையோ அவர் பிறரையும் கூட தனது தீய சகவாசத்தின் மூலம் தவறான பாதையின் பக்கமே இட்டுச் செல்வதற்கு பொறுப்புடையவராக ஆகிறார். அவரால் மற்ற மனித ஆத்மாக்களிடத்தில் மாற்றத்தைக் கொண்டுவர முடியாது மேலும் யோகயுத்தி உடைய கூட்டத்தின் வளர்ச்சியையும் கொண்டுவர முடியாது.

## 4. மனதை சுகமாக வைத்திருக்கும் கலை

## (The art of keeping happy and contented)

தன்னை எப்போதும் மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வது கூட ஒரு பெரிய கலையாகும். விரல்விட்டு எண்ணக்கூடிய சிலரே எந்தவொரு சூழ்நிலையிலும் தன்னை திருப்திகரமாக வைத்திருக்க கூடியவர்களாக இருக்கிறார்கள். யாராவது கொஞ்சம் விரும்பத்தகாத வகையில் நடந்துகொண்டால் எரிச்சல் உண்டாகிறது. ஏதேனும் விரும்பிய பொருள் குறைந்து விட்டால் அதிருப்தி உண்டாகிறது. யாராவது தவறுதலாக ஏதேனும் நாகரீகமற்ற வார்த்தையைச் சொல்லிவிட்டால் மனநிலை மோசமாகி விடுகிறது. ஏதேனும் விருப்பமற்ற நிகழ்வு நடந்துவிட்டால் மனதில் துக்கமடைந்து அங்கலாய்ப்பு வருகிறது. பெரும்பாலும் எல்லோருமே இப்படித்தான் நடந்துகொள்கிறார்கள். ஆனால் யோகமானது அப்படிப்பட்ட ஒரு கலையாக இருக்கிறது அதனை திறமையாக தனதாக்கிக் கொள்வதன் மூலம் மனிதன் வியாதியிலும், பிரியமான நண்பரின் மரணத்திலும், வியாபாரத்தில் ஏதேனும் நஷ்டம் ஏற்பட்டபோதிலும் மற்ற

எந்தவிதமான இக்கட்டான சூழ்நிலையிலும் கூட உறுதியாக அதாவது மலர்ந்த நிலையில் இருக்க முடியும். எனவே தான் இகழ்-புகழ், மான-அவமானம், இலாபம்-நஷ்டம் முதலிய யாவற்றிலும் ஒரே மனநிலையில் இருப்பவரே யோகி எனச் சொல்லப்படுகிறது.

யார் தனது வாழ்க்கையில் மகிழ்ச்சியாக இருப்பதில்லையோ அதாவது அதிக நாட்கள் துன்பத்திலும் வெகு சில நாட்கள் மட்டும் மகிழ்ச்சியாக இருக்கிறார்களோ, அப்படிப்பட்ட மனிதவாழ்வு எந்த வேலைக்கு உதவும்? அவரது வாழ்வு அவருக்கே ஒரு சுமையாக அமைந்து விடுகிறது. அதனால் அவர் ஒரு கழுதையைப் போல அதைத் தாங்கிக் கொண்டிருக்கிறார். எப்படி கழுதையின் மீது பொற்காசுகளின் மூட்டையை ஏற்றிவிட்டாலும், அந்தக் கழுதைக்கு அதன் மதிப்பு தெரியாததாலும் அதைப் பயன்படுத்த முடியாததாலும் அதனை பாரமாக் கருதி, தன் முதுகில் சுமந்து செல்கிறதோ, அதைப்போலவே வாழ்க்கை என்ற விலைமதிக்க முடியாத செல்வத்தின் மூலம் ஈடு இணையற்ற ஆனந்தத்தை அனுபவிப்பதற்குப் பதிலாக அதை கீழே தள்ளி சுடுகாடு வரை இழுத்துச் செல்லக்கூடிய மனிதருக்கும் அப்படிப்பட்ட நிலையே ஏற்படுகிறது.

பார்க்கப்போனால் தனது மனதை சுகமான நிலையில் இருக்கச் செய்வதற்கு அதாவது எப்போதும் மகிழ்ச்சி உடையதாக இருக்கச் செய்வதற்கு மனிதனிடம் முக்கியமாக ஆறு விசயங்கள் இருக்க வேண்டும் (1) எதையும் ஞானத்தின் அடிப்படையில் பார்ப்பது (2) பிறரைப் பாராமல், எப்போதும் தன்னிலையைக் காப்பதோடு சிக்கலான சூழ்நிலைகளிலும் தனது நிலையை சரியாக வைத்திருப்பதற்கான இலட்சியம் கொள்வது (3) தீமை செய்பவருக்கும் நன்மையே செய்ய வேண்டும் என்ற எண்ணமுடன் இருப்பது (4) இந்த உலக நிகழ்வுகள் எல்லாம் ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டபடி நடக்கிற நாடகம் என ஏற்று அதில் வருகிற ஒவ்வொரு காட்சியையும் ‘விதி’ அல்லது ‘நடக்கவேண்டியது’ அல்லது ‘தனது முன்வினைப் பயன்’ என அறிந்து கர்மக் கணக்கை முடித்துக் கொண்டிருக்கிறோம் என ஏற்றுக்கொள்வது (5) சாட்சியாக இருந்து அனைத்தையும் பார்ப்பது (6) இந்த உலகத்தை கதம்ப மரமாகக் (variety tree) கருதி அதன் சதோ, ரஜோ, மற்றும் தமோ நிலையை அறிந்து விபரீத சிந்தனை உடைய மனிதர்கள் மீதும் வெறுப்படையாமல் இருப்பது.

எதுவரை மனிதனிடத்தில் சரியான நோக்கமில்லையோ (right attitude) அதுவரை அவன் மகிழ்ச்சியாக இருக்க முடியாது என்பது தெளிவு. இப்போது யோகி மட்டுமே தனது யோகக்கலையின் ஆதாரத்தில் பூரண பார்வை உடையவராக இருக்க முடியும். உடலில் வியாதி வருமானால் ‘இதனால் முன்வினையின் சுமை குறைகிறது’ என அறிந்து கொள்கிறார். நண்பர் யாரேனும் மரணத்தை தழுவினால் ‘ இந்த நாடகத்தில் அவரது பாகம் முடிந்து விட்டது’ என சொல்கிறார். வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டுவிட்டால் ‘முன்வினையின் படி எது நடக்க வேண்டுமோ அது நடந்து விட்டது’ என்று தன்னைத் தேற்றிக்கொள்கிறார். யாராவது அவமரியாதை ஏற்படும்படி பேசினாலும் அவர் தனது மனநிலையை சரியான நிலையில் வைத்திருக்கிறார், ‘உன்னை நீ சரியாகப் பார்த்துக்கொண்டால் மற்றவர் என்ன செய்ய முடியும், உன் மூட்டையை நீ சரியாகப் பார்த்துக் கொண்டால் திருடர்கள் என்ன செய்ய முடியும்’ என அதற்கொரு பழமொழி கூட இருக்கிறது. எனவே யோகத்தின் மூலமாகவே மனிதர்கள் இந்தக் கலையில் வெற்றிவாகை சூட முடியும், வேறு எந்த வழியும் இல்லை என்பது தெளிவாகிறது.

## 5. ஒருங்கிணைக்கும், தலைமை தாங்கும், நிர்வகிக்கும் கலை

### (The art of organising, leadership and administration)

ஏதாவது உயர்ந்த வகையில் செயல்படுவதாலும், ஏதாவது சிறந்த செயலை செய்து முடித்துக் காட்டுவதாலும் கூட ஒருவருடைய வாழ்க்கை வெற்றிகரமாகி விடுகிறது. அதற்காக பிறருக்கு உதவக்கூடியவராக, வலிமை சேர்ப்பவராக இருப்பது அவசியமாகிறது. எனினும் மனிதர்கள் பலர் தனது வாழ்வில் அப்படிப்பட்ட மகத்துவம் வாய்ந்த செயல் எதுவும் செய்ய முடியாமல் இருக்கிறார்கள். அவர்களிடம் சில யோசனைகள் இருக்கிறது, இருந்தும் அந்த யோசனைகளை காரியத்தில் கொண்டுவர முடிவதில்லை. இதைக்குறித்து சிந்திக்கும்போது இந்த சேத்திரத்தில் வெற்றியடைய வேண்டும் என்றால் மனிதர்களிடத்தில் இந்த ஆறு விசயங்கள் இருக்கவேண்டியது அவசியம் என்பதை நீங்கள் நிர்ணயிக்க முடியும் (1) பிறருக்கு நல்ல ஆலோசனைகளைத் தந்து உதவி செய்பவராகவும், துணை நிற்பவராகவும் ஆக்கும் தகுதி (2) பிறரிடம் உற்சாகத்தை நிரப்புவதோடு தானும் எப்போதும் உற்சாகமாக இருந்து நுணுகிய பார்வையும், உள்ளுணர்வும் (insight and intuition) பெற்றவராக இருப்பது (3) கணப்பொழுதில் நிர்ணயம் செய்பவராகவும், பரந்த நோக்கம் உடையவராகவும் இருப்பது (4) அனைவரையும் ஒருங்கிணைக்கும் பண்பு (5) பழகும், கட்டுப்படுத்தும் சக்தி (6) எல்லோருடைய விசயங்களையும் தனக்குள் அடக்கிக்கொள்ளுவதோடு அவைகளை தகுதிக்குத் தக்கபடி, சக்திக்குத் தக்கபடி புதுப்புது முயற்சியில் ஈடுபடுத்துவது.

இப்போது யாருடைய புத்தியின் ஈடுபாடு கல்யாணகாரி பிரபுவிடம் இருக்கிறதோ அவர் ஒரு வரலாறு காணாத எழுச்சியை உண்டாக்க அதாவது மக்களுக்கு நன்மை பயக்கும் காரியத்தின் பிரபலமான கடைசி பிரேரணையை தரக்கூடிய மேலும் அதனை செயல்படுத்துவதற்கு தடுக்கமுடியாத உற்சாகம் உடையவராக விளங்குவார். பரமாத்மா மட்டுமே களைப்பில்லாத மேலும் சக்திசாலி கல்யாணகாரியாக இருக்கிறார். அந்த இறைவனிடம் அன்பு செலுத்துவதால் மட்டுமே மனிதனிடத்தில் பிறரது உயர்வுக்காக அபார சாகசம், தொடர்ந்த ஈடுபாடு, மின்னலைப் போன்ற வேகம் முதலியவை ஏற்படுகிறது. பரமாத்மாவின் செய்தியை பிறருக்கு அளிக்கக்கூடிய மனிதரே எப்போதும் விழிப்புணர்வுடனும், சுறுசுறுப்புடன் இருக்க முடியும் மேலும் உளப்பூர்வமாக சேவையில் ஈடுபட்டிருப்பதே திருப்தி தரும் வாழ்க்கையாக அமைகிறது. யோகியாக இருப்பவர்களுக்கு பரமாத்மாவின் மீது முழுமையான நம்பிக்கை இருக்கிறது மேலும் அந்த மூன்று காலத்தையும் அறிந்தவரின் வரதானத்தின் மூலம் தொலைநோக்கு பார்வை உடையவராகவும் இருக்கமுடிகிறது. அதனால் நல்ல காரியத்தை முதலில் செய்ய துவங்குவதற்கு எவ்வித சங்கோஜமும் இருப்பதில்லை அதோடு தலைமைப் பண்பிற்கு இது அவசியமானதாகவும் இருக்கிறது. பரம புத்திவான் பரமாத்மாவோடு புத்தியின் இணைப்பு இருப்பதனால் அவருக்கு அழகழகான யோசனைகள் உதித்துக்கொண்டே இருக்கிறது மேலும் அதனை நடைமுறையில் கொண்டுவருவதற்கும் வழிவகைகள் கிடைத்த வண்ணம் உள்ளன. அதோடு அவர்கள் பிறருக்கும் நல்வழி காட்டக் கூடியவர்களாக இருக்கிறார்கள். இவ்வண்ணம் யோகத்தின் மூலமாகவே தலைமை தாங்கும் கலை வளர்ச்சி அடைகிறது. அதன்மூலம் மனிதர்கள் மிக அதிகமான மக்களுக்கு உதவி செய்பவராகவும் துணை நிற்பவராகவும் ஆகி அவர்களை அன்பு நிறைந்த பண்புகளால் கட்டிவைத்து, தெய்வீகத்தை தாரணைசெய்யும் நியதிக்குள் கொண்டுவந்து அவர்கள் மூலமாகவும் உயர்ந்த செயல்களை செய்ய வைப்பதோடு தானும் மகத்துவம் வாய்ந்த செயல்களைச் செய்து காலத்தை கழிக்கிறார்.

யார் யோகியாக இருக்கவில்லையோ அவர் தன் மன வழிப்படியே நடப்பார். கல்யாணகாரி பரமாத்மாவின் அறிவுரை, ஆலோசனை, கட்டளை எதுவும் அவருக்கு கிடைப்பதே இல்லை. அப்படி இருக்க அவர் பிறருக்கு எப்படி நன்மை செய்ய முடியும்? வாழ்க்கைப் பாதையில் வரும் எல்லா கஷ்டங்களையும் எதிர்த்து சமாளிப்பதற்கு தேவைப்படும் சாகசம், சாதுரியம், சாமார்த்தியம், அறிவு, உத்தி ஆகியவைகள் அவருக்கு எங்கிருந்து வரும்? எப்போது அவரே தனது வாழ்வில் குறிப்பிட்ட அளவு முன்னேறவில்லையோ அப்போது அவர் பிறரை எப்படி முன்னேற்ற முடியும். சமூகத்தில் ஆன்மீக புரட்சியை உருவாக்கும்

அதாவது யுக-மாற்றத்தைக் கொண்டுவரும், அஹிம்சையான மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் ஒரு திறமைமிக்க தலைவராக அப்படிப்பட்டவரால் விளங்க முடியாது என்பது நிச்சயம். நற்குணங்களின் நறுமணத்தால் நிறைந்த மனித மலர்களை ஒரு மாலையாகக் கோர்க்க அதாவது அப்படிப்பட்டவர்களை உருவாக்கும் மகத்துவம் நிறைந்த காரியத்தை அவர்களால் செய்ய முடியாது. ஊக்கமிழந்த மற்றும் விகாரங்களின் தாக்கத்தால் உயிரிழந்த மனித மூளையில் புத்துயிரை ஊட்ட முடியாது. ஒரு கலகலப்பான, களங்கமில்லாத ஞான அருவியை கரைபுரண்டோடச் செய்வதில் அவர் அந்த பாக்கியரதனின் செயலைச் செய்யமுடியாது. அவருடைய கொடுமையான மனம் அல்லது உலகீய அறிவு இந்த உலகில் கூச்சல், குழப்பத்தை ஏற்படுத்தக்கூடிய சில கலகம் சில கிலேசம் சில உபத்திரவம் முதலியவற்றை உருவாக்குவதற்கான செயற்கை சாதனமாக அமைந்து விடுகிறது.

## 6. கற்கும் மேலும் கற்பிக்கும் கலை

### (The art of learning and teaching)

உண்மையை சொல்லப் போனால், மனிதன் வாழ்நாளெல்லாம் பாடம் கற்கக கூடியவனாக இருக்கிறான். எனினும் வெகுசிலரே வாழ்நாள் முழுவதும் ஏதாவது கற்றுக்கொண்டே இருக்க வேண்டும் என்ற இலட்சியம் உடையவராக இருக்கிறார்கள். பலருக்கு கற்கும் வேகம் மிகவும் மந்தகதியில் இருக்கிறது ஏனெனில் அவர்கள் தாங்கள் பெற்ற சொற்பகல்வியின் அபிமானத்தில் ஊறியிருக்கிறார்கள் அதாவது இன்னும் அதிகதிகமாகக் கற்று முன்னேற வேண்டும் என்ற ஆர்வம் அவர்களிடம் இருப்பதில்லை. அவர்கள் வாழ்க்கை உயர்வின் பக்கம் செல்லாமல் தாழ்வின் பக்கம் செல்கிறது. வாழ்வை அனுபவிப்பதில் ஈடுபட்டிருக்கும் அந்தமாதிரி போகியர்களின் போகமே ஒருநாள் அவர்களை போகித்துவிடுகிறது.

மனிதர்கள், தெரிந்தோ தெரியாமலோ பிறருக்கு ஏதாவது கற்றுக் கொடுத்துக் கொண்டேதான் இருக்கிறார்கள். ஒருவன் தன் வீட்டில் மனைவியிடம் கோபப்படும்போது, அவள்மீது கை நீட்டும்போது அங்கிருக்கும் சின்னஞ்சிறு குழந்தைகள் அவனுடைய இந்த அடாவடித் தனத்தைக் கற்றுக்கொள்ள மாட்டார்களா? அந்த மென்மையான, அரும்பிய மொட்டுக்கள் இந்த செயலால் பாதிக்கப்பட மாட்டார்களா என்ன? இவ்விதமாக, மனிதனது நடத்தையையும், அவனது ஆடை அலங்காரத்தையும், அவனது ஒவ்வொரு விசயத்தையும், அவனது விவகாரங்களையும், ஆச்சாரங்களையும் அவனது அக்கம் பக்கம் இருப்போர் பார்த்துக்கொண்டேதான் இருக்கிறார்கள் அது அவர்கள்மீது ஒரு தாக்கத்தை பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டே இருக்கிறது என்பதை அறியாமல் இருக்கிறார்கள். மேலும் தாங்கள் அறியாமலேயே பிறரிடம் இருந்து கற்றுக்கொள்ளவும் செய்கிறார்கள் என்பது சத்தியமான உண்மை. இது மட்டுமல்ல, மனிதனது ஒவ்வொரு அங்க அசைவுகளின் பிரபாவமும் சுற்றி இருக்கும் உலகத்தின் சூழ்நிலையில் பாதிப்பை ஏற்படுத்துகிறது ஏனெனில் ஒவ்வொரு செயலும் ஒரு விளைவை உண்டாக்குகிறது என்பது விஞ்ஞான நியதி, பிறகு அந்த விளைவு ஒரு செயலின் உருவைத் தாங்கி மற்ற விளைவுகளை உருவாக்க காரணமாகிவிடுகிறது இப்படியாக செயல்-விளைவின் முடிவில்லாத, கண்ணுக்குத் தெரியாத ஒரு சங்கிலித்தொடர் உருவாகிவிடுகிறது. அது முழு உலகிலும் அலைபோல வலம் வந்து எங்கும் பரவி ஒவ்வொரு அணுவிலும், ஒவ்வொரு மனதிலும், எந்தவொரு அற்பப் பொருளாயினும் சரி அதன்மீதும் பிரபாவத்தை அவசியம் ஏற்படுத்துகிறது. யோகியானவன் கர்மத்தின் இந்த ஆழமான விளைவை அறிந்த அறிவுடன் தனது எவ்விதமான மரியாதைக்குப் புறம்பான அல்லது தவறான செயலால் யாரும் தவறான பிரேரணையை பெற்றுவிடக்கூடாது என்றும் பிறர் கெட்டுப்போவதற்கான தோஷம் ஒருபோதும் தன் தலைமேல் ஏறக்கூடாது என்றும் தமது

கர்மத்தின்மீது விழிப்புடன், கவனமுடன், அக்கறையுடன் இருப்பார். வேறு வார்த்தைகளில் சொல்வதானால் அவர் எப்போதும் மக்கள் நலனைப் பற்றிய சிந்தனையிலேயே இருப்பார்.

சிந்தித்துப் பார்க்கும்போது, கற்கும் மேலும் கற்பிக்கும் கலைக்காக முக்கியமாக ஆறு விசயங்கள் இருக்க வேண்டியது அவசியம் என நீங்கள் முடிவிற்கு வருவீர்கள் -(1) குணங்களை கிரகிக்கும் பண்பு (2) அகந்தையின்மை (3) கற்க வேண்டும் என்ற தனியாத ஆர்வமிருப்பதோடு இன்னும் நான் நிறைய கற்க வேண்டியது அவசியம் என்ற உணர்வு (4) பிறருக்கு கற்பிப்பதற்காக உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பாகுபாடின்மை (5) பிறரை சரியாகப் புரிந்துகொள்ளும் சக்தி (6) பிறருக்கு எந்த விசயத்தைக் கற்பிக்க வேண்டுமோ அந்த விசயத்தை நடைமுறையில் செய்து காட்டி நம்பிக்கை உண்டாக்கும் திறமை. மேலும் பிறரிடம் அன்பு காட்டி அவரை தனக்கு சமமாகவோ அல்லது தன்னைவிட மேலாகவோ ஆக்குவதற்கான பாவனை மேலும் எடுத்த காரியத்தை சரியாக முடிப்பதற்கான மனோபலம்.

யார் பிரபுவின் குணங்களை மனதில் எண்ணிப் பார்க்கிறார்களோ மேலும் தேகத்தை மறந்து ஆன்ம உணர்வில் இருக்கிறார்களோ அவர்களிடமே குணத்தை கிரகிக்கும் பண்பும், அகந்தையின்மையும் சகஜமாக இருக்க முடியும் என்பதை இப்போது புரிந்துகொள்ளலாம். யாருக்கு ஆசிரியர் மற்றும் குருவாக பரமபிதா பரமாத்மா இருக்கிறாரோ அவருக்கே எப்போதும் கற்க வேண்டும் என்ற தணியாத ஆசையும் அந்த கல்வியறிவை பெறுவதற்கான இடைவிடாத முயற்சியும் இருக்கும். அவர்கள் மிகவும் கண்ணியமானவர்களாக இருப்பார்கள், இனிமையாக இருப்பார்கள் மேலும் பிறருக்கு ஞான செல்வங்களை அள்ளிக் கொடுப்பதில் சாமார்த்தியசாலிகளாக இருப்பார்கள். ஆனால் எப்போது அவர் அந்த அறிவுரைகளை எல்லாம் தன்னுடைய வாழ்வில் கடைப்பிடிப்பவராக இருக்கிறாரோ அப்போதே அவருடைய இந்த ஆசை அல்லது முயற்சியானது வெற்றி பெறும். மேலும் இந்த தாரணை எல்லாம்கூட யோகத்தின் அங்கமாகவே இருக்கிறது, தாரணை செய்யும் புத்திகூட யோகத்தினாலேயே உருவாக்கப் படுகிறது.

பிறர் மீது சுபபாவனை, அவர் மீது அன்பு, அடுத்தவருக்கு பாடம் கற்பித்து தன்னைவிட மேலே உயர்த்தும் தன்மை ஆகியவற்றிற்கு பொறாமை இல்லாத பாவனை, வெறுப்பில்லாமல் பிறரது குறைகளை களைதல் போன்ற அபார மனவலிமை தேவை. இவை எல்லாம் கூட ‘யோகக்கலை’யின் மூலமாகவே மனிதர்களுக்குக் கிடைக்கிறது. ஒருகால் மனிதனுக்கு பிறரை கல்வியில் கரைசேர்க்க வேண்டும் என்பதில் மனவுறுதி இல்லாமல் போனால் அவரால் முழுமையாக கற்பிக்க முடியாமல் போகும். ஒருகால் அவர் கற்போருடைய சாமார்த்தியத்தை கண்டுபிடிக்க முடியாமல் போனாலும் அவரை முழுமையாக பலன் பெறச் செய்ய முடியாமல் போகும்.

ஒருவேளை ஒருவர், அன்பால் பிறருடைய இதயத்தை ஜெயிப்பதற்குப் பதிலாக அவர்களை திட்டி-கடிந்து, குற்றஞ்சாட்டிக் கொண்டே இருந்தால் கூட தனது தகாத நடத்தையால் பிறரது புத்தியை பயனற்றதாக்கி விடுவார்கள். ஆனால் பிறருக்கு அறிவைத் தர வேண்டும் என்றால், அதற்காக தயாள குணம், பிறர் மீது அன்பு அனுசரனையான பார்வை, கற்பவர் மீது மதிப்பு ஆகிய விலை மதிப்பபற்ற இரத்தினங்கள், யோகத்தின் மூலமாகவே மனிதர்களுக்கு கிடைக்கிறது.

இப்படியாக, எந்த மனிதனுடைய மனதில் இப்போது கற்றுக்கொள்வதற்கு ஏராளமான விசயங்கள் இருக்கிறது என்ற எண்ணமே இல்லையோ, யார் தன்னைவிட பெரியவர்களை மதிப்பதில்லையோ, சேவை உணர்வோடு, அகந்தையில்லாமல், சரள மனதோடு, இனிமையான வழியில் கல்விச் செல்வத்தைப் பெற வேண்டும் என்ற எண்ணமில்லாமல் இருக்கிறார்களோ, அவர்கள் உயிரை வளமாக்கும் கல்விச் செல்வத்தை எப்படிப் பெற முடியும் மேலும் இந்த உத்தியை யோகமில்லாமல் எப்படிப் பெறமுடியும்.

# 7. வேலையையும் ஓய்வையும் அனுபவிக்கும் கலை

## (The art of enjoying work and leisure)

பெரும்பாலான மனிதர்கள் சாதாரணமான செயலைச் செய்வதாக இருந்தாலும், அதை ஒரு பெரிய செயல் போல, பெரிய சுமை போல செய்து கொண்டிருப்பதைப் பார்த்திருப்பீர்கள். வெகுசிலரே செயற்கரிய செயலைச் செய்து முடித்த பின்னரும் அதனைச் செய்ததற்கான அடையாளமே தெரியாமலும் அதைக்குறித்த சிந்தனையே இல்லாமலும் இருப்பதோடு அதிலிருந்து விலகி இருப்பதையும் பார்க்க முடிகிறது. அவ்வப்போது மனிதர்கள் சிலர் ஏதாவது காரியம் செய்வதில் ஈடுபட்டுவிட்டார்கள் என்றால் அதில் அந்த அளவு ஆழமாக மூழ்கிவிடுகிறார்கள் அதனால் அதிலிருந்து வெளிவருவது கூட கடினமானதாகத் தோன்றுகிறது. எப்படி ஈயானது தேன் குடிக்க விரும்பி அதில் வாய் மட்டும் வைப்பதற்குப் பதிலாக சற்றே காலையும் வைத்து விட்டால் பிறகு அந்த தேனில் சிக்கி உயிரையே விட்டுவிட நேரிடுகிறது. என்றாலும் ஒருசிலர் தன் சுயவிருப்பப்படி அவ்வப்போது செயலில் ஈடுபடவும் பிறகு அதிலிருந்து விலகி இருப்பதற்கும் உரிய திறன் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் செயலை மிகச் சிறப்பாக செய்கிறார்கள். எனினும் அந்தச் செயலைப் பாக்கும் போது, அவர்கள் அந்த செயலை விளையாட்டுபோல அதாவது தனது சந்தோசத்திற்காக செய்வதைப் போல தெரிகிறது. அவர்கள் வேலை செய்வதைப் பார்த்தால் அவர்கள் அதன் சுமையால் அழுத்தப்பட்டிருக்கிறார்கள் என்றோ அல்லது அதனால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்றோ அல்லது அதன் சுமையால் சோர்ந்து விட்டார்கள் என்றோ அல்லது பிறரது கட்டாயத்தின் காரணமாக செய்கிறார்கள் என்றோ ஒருபோதும் தோன்றாது. விரல்விட்டு எண்ணிவிடக் கூடிய வெகுசிலரே செயலாற்றும் போது செயலின் மீது பூரண நம்பிக்கை வைத்திருப்பதையும், அந்தச் செயலை முழுமையாக தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதையும், அதன் விளைவு என்னவாகும் என்பதைப்பற்றி இம்மியளவு கூட கவலைபடாமலும் இருப்பது பார்ப்பவர்களுக்குத் தெளிவாக தெரியும். இருப்பினும் அவர்கள் அந்த செயலை சிறந்தவகையில் செய்து முடிப்பதற்காக முழுவிழிப்போடும், முழுசிரத்தையோடும் செயல்படுவதோடு கடைசிவரை தங்கள் முயற்சியைக் கைவிடாமலும் இருப்பார்கள். கர்மயோகி மட்டுமே அப்படி இருக்க முடியும். ‘வேலைத்திறனுக்கு யோகம் என்று பெயர்’ என கீதையில் ஓரிடத்தில் தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும் அதிகமாக, யோகியின் வாழ்வை ஆமையோடு ஒப்பிட்டு காட்டப்படுகிறது, ஆமையிடம் உள்ள சிறப்பியல்பு என்னவெனில் அது செயல்பட நேரிடும்போது அதில் ஈடுபடவும் பின்னர் விரும்பும்போது கர்மேந்திரியங்களை உள்ளிழுத்து அதிலிருந்து விலகவும் அதனால் முடியும்.

சிந்தனை செய்து பார்க்கும்போது இந்தக் கலைக்காக மனிதனிடத்தில் முக்கியமாக ஆறு விசயங்கள் இருக்கவேண்டியது அவசியமாகிறது (1) காரியத்தை சுருக்கும் சக்தி (2) காரியத்தைப் பெருக்கும் சக்தி (3) எல்லா வேலைகளையும் செய்யும் திறமையை வளர்த்துக் கொள்வது அதாவது ஆல்ரவுண்டர் (all–rounder) ஆவதற்கான முயற்சி (4) உலக நாடகம் என்ற தண்டவாளத்தில் உறுதியாக நடப்பது (5) இந்தக் காரியத்தை நான் எண்ணற்ற முறை செய்திருக்கிறேன், இது பெரிய விசயமோ அல்லது புதிய விசயமோ கிடையாது என நினைப்பது (6) தன்னம்பிக்கை அதாவது நான் சர்வசக்திவான் பரமாத்மாவின் குழந்தை, ஒருகால் இந்த செயலை என்னால் செய்ய முடியாமல் போனால் வேறு யாரால் அதை செய்ய முடியும்? வெற்றி என்பது எனது பிறப்புரிமை, நான் தைரியம் கொள்ளும்போது கடவுள் எனக்கு கட்டாயம் உதவி செய்கிறார் என்ற நம்பிக்கை.

ஆனால் மேலே உள்ள இந்த ஆறு விசயங்களும் மானிட வாழ்வில் இருக்க வேண்டியது அவசியம் என ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அவைகள் எல்லாம் ஞானம் நிறைந்த யோகியின் வாழ்வில் மட்டுமே இருக்க முடியும். ஏனெனில் அவர் ஞானத்தின் ஆதாரத்தில் சிருஷ்டி வடிவ சுற்றி வரும் நாடகத்தில் நான் எனது இந்த பாகத்தை எண்ணற்ற முறை நடித்திருக்கிறேன் எனப் புரிந்திருக்கிறார். அதனால் அவர் இலேசாக இருந்து கல்பத்திற்கு முன்னர் நான் எப்படி இந்தச் செயலைச் செய்தேனோ அப்படியே மிகச் சரியாக

இப்போதும் செய்து முடித்து விடுவேன். இதில் இம்மியளவு கூட சந்தேகமே இல்லை என்ற ஆத்ம விசுவாசத்தோடும், நம்பிக்கையோடும் அவர் செயலில் இறங்குகிறார். அதாவது அவர் எப்போதும் காரியம் செய்து கொண்டிருந்த போதும் அதிலிருந்து விலகி, பணியில் இருந்த போதும் அதிலிருந்து தணித்து காணப்படுகிறார். இன்னும் அதிகமாக சொல்வதானால், பரமபிதா பரமாத்மாவிடம் யோகத்தில் இணைந்திருக்கம் மனிதரே செயலின் வெற்றியில் சந்தேகம் கொள்ளாமல், தாமே இறைவனின் உதவிக்கு பாத்திரமானவன் என நம்பி மகிழ்ச்சியான மனதோடு அதாவது செயலை மனமகிழ்ச்சிக்கான ஒரு சாதனம் என ஏற்று அதை தனது செயல் என்று அறிந்து குஷியோடும், துடிப்போடும் அதை செய்து முடிக்கிறார். தன்னை சர்வசக்திவானின் குழந்தை என நம்பிக்கை கொள்வதன் பலனாக அவரிடத்தில் ஆத்ம விசுவாசம் எப்போதும் இருந்து கொண்டே இருக்கும். அதனால் அவர் மனம் இருநிலையில் இல்லாமல் போகும். ஒருமித்த மனதோடு காரியத்தை செய்து முடிக்கிறார் மேலும் கெட்டுப்போன காரியங்களையும் கூட தனது சரள சுபாவத்தினால் சரளமாகவும், சகஜமாகவும், வெற்றிகரமாகவும் நல்லதாக செய்து முடிக்கிறார். அதாவது யோகத்தின் மூலமாகவே வாழ்க்கையில் இந்தக் கலையும் வளர்ச்சி அடைகிறது.

## 8. சொற்பொழிவாற்றும் கலை மற்றும் கடிதம் எழுதும் கலை

### (The art of speech and letter-writing)

பிரபாவத்தை ஏற்படுத்தும்படி, மக்களுக்குப் பிடிக்கும்படி, உண்மையான பேச்சின் மூலம் தனது அபிப்ராயத்தை தெளிவாகவும், இலக்கை நோக்கியும், சுவையாகவும், தனது விசயம் மக்கள் மனதிலே ஆழமாக பதியும்படியும், நம்பிக்கை அல்லது உடன்படும்படியான உணர்வை ஏற்படச் செய்யும்படி பேசுவதுகூட ஒரு கலையே. மனிதர் நல்லவராக இருப்பாரானல் அவர் மக்களின் மனதில் இடம்பிடித்துவிடுவார். மேலும் அவர் பிறரை தனது சகயோகியாக, ஆதரவு தருபவராக, உதவி செய்பவராக உருவாக்கி விடுவார். அவர் தனது இனிமையான வார்த்தைகள் மூலம் ஒவ்வொருவரையும் தன்னுடையவர் ஆக்கி அவர்களிடம் நல்ல சம்பந்தத்தை உருவாக்கிவிடுவார். இவ்விதமாக வாழ்வை சுகமாக்க ஏற்பாடு செய்வார். இவ்விதமாக, மனிதர்களுடைய வார்த்தையில் நிறைய தெளிவைக் கொண்டுவருவார். ‘இரண்டரை இஞ்ச் நாக்கு மனிதனை சிம்மாசனத்திலும் அமர்த்துகிறது, அதுவே மனிதனை தூக்குமேடைக்கும் அனுப்புகிறது’ என பழமொழிகூட இருக்கிறது. ஏனெனில் மனிதன் நல்ல வார்த்தைகளை அதாவது பிரியமான வார்த்தைகளை பேசும்போது மக்கள் அவரை ஆட்சியாளராக அல்லது மந்திரி பதவிக்காக தேர்ந்தெடுக்கிறார்கள், அதேவேளை அவர் பிரிவினை, அராஜகம், உபத்திரவம், தேசத்துரோகம் முதலியவைகளை பரப்பும்படியாக பேசினால் அவருக்கு தூக்கு தண்டனை வழங்கப்படுகிறது. ஒரு மனிதருடைய பேச்சு பிரிந்திருக்கும் மனிதர்களை ஒன்றுசேர்த்து விடுகிறது. ஆனால் வேறொருவருடைய புறம்பேசல், நிந்தித்தல், அவகுணங்களை வர்ணித்தல் முதலியவை எல்லாம் நண்பர்களிடையேகூட வேற்றுமையையும், வெறுப்பையும் உருவாக்க காரணமாக அமைந்து விடுகிறது. அதனால்தான் ‘இந்த நாக்கு கத்தரிக்கோலாகவும் இருக்கிறது, ஊசியாகவும் இருக்கிறது’ என்று சொல்லப்படுகிறது. மனிதன் அறிவு நிறைந்த, அனுபவபூர்வ, விலைமதிப்பற்ற வார்த்தைகளைப் பேசினால், இவருடைய வாயிலிருந்து அன்பு மழை அல்லது மலர் மழை கொட்டுகிறது என மக்கள் சொல்வார்கள். அதேவேளை எந்த மனிதனாவது கடுமையான, உண்மைக்குப்

புறம்பான, மரியாதைக் குறைவான, பொய்யான அல்லது சச்சரவான விசயங்களைப் பேசினால் 'இவருடைய வாய் கோடாலி போல வேலை செய்கிறது' அதாவது 'இவா் வாயிலிருந்து கற்கள் வீசுகிறது' என மக்கள் சொல்வாா்கள். யாராவது பிரியமான மற்றும் இனிமையான வாா்த்தைகளைப் பேசும்போது 'இவா் குயிலாக இருக்கிறாா் என்றோ அல்லது வானம்பாடியாக இருக்கிறாா்' என்றோ மனிதா்கள் சொல்வாா்கள். அதேவேளை யாராவது தீய வாா்த்தைகளை, மரியாதைக் குறைவான வாா்த்தைகளை, அதாவது வீணான வாா்த்தைகளைச் சொல்லி தலையைக் குடைந்தால் ' இவா் ஒரு காக்கை' என்று சொல்வாா்கள். அதாவது யாரோ சொன்னாா்கள் -

**"காக்கை ஒருவரது செல்வத்தைப் பறிக்கும், குயில் ஒருவருக்கு கொடுக்கும்,**
**இனிய வாா்த்தை பேசி, உலகை தன் வசப்படுத்தும்"**

காக்கை, குயில் இருண்டுமே கருமை நிறம் உடையவை ஆனால் இரண்டின் குரலும் தனித்தனியாக இருக்கிறது. அதனால் ஒன்றை உயா்ந்ததோடும் மற்றதை தாழ்ந்ததோடும் ஒப்பிடப்படுகிறது. இந்த விசயம் மனிதா்களுக்கும் பொருத்தமாக இருக்கிறது. ஒரு மனிதன் அபிமானமுடன் அல்லது கோபத்துடன் பேசும்போது சண்டை ஆரம்பம் ஆகிவிடுகிறது. மனம் எரிச்சலடைகிறது, அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டுவிடுகிறது என்பதையெல்லாம் நீங்களும் பாா்த்திருப்பீா்கள். மனிதா்களிடத்தில் வாா்த்தையை உபயோகிக்கும் நயமின்மையே உலகில் பல சண்டைகள் ஏற்பட காரணமாக இருந்தது என்று வரலாறு சொல்கிறது. மனிதா்களுக்கிடையே பேச்சுவாா்த்தை நடக்கும்போது அங்கே அன்பு, உதவி, நட்பு மற்றும் சகோதரத்துவ பாவனை இல்லாமல் அதற்குப்பதிலாக அபிமானம், கோபம், வேற்றுமை மற்றும் சுயநலம் நிறைந்திருப்பதே இன்று வீட்டில், தெருவில், நாட்டில் மேலும் உலகில் சண்டை ஏற்படுவதற்கு காரணமாக இருக்கிறது. பணிவு வந்துவிடுமானால் உலகம் சுகமானதாகிவிடும். 'பணிவுடைய ஒருவா் நூறுபேரைத் தோற்கடிப்பா்' அதாவது 'பேசாமல் இருப்பவா் நூறுபேரை தோற்கடிப்பா்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. எங்கே பேச வேண்டும், எங்கே பேசக்கூடாது, எங்கே குறைவாகப் பேச வேண்டும், எங்கே பேசாமல் இருக்க வேண்டும் என்பதெல்லாம் ஒரு பெரியதிறமை, பெரியகலை, பெரியமுயற்சி. மனிதா்கள் கம்பீரமாக இருந்தால், பிரியமானவராக இருந்தால், பணிவானவராக இருந்தால், அன்பாக இருந்தால், விரோதியும் நண்பனாகி விடுவான். மேலும் யாரோ சொன்னாா்கள் -

**"அன்பினால் விரோதியை தன் நண்பனாக்கி விடுகிறாா்கள்,**
**அடாவடியின் தலையைப் பாா்த்து பயந்தவன் பணிகிறான்"**

## கடிதம் எழுதும் கலையின் மகத்துவம்

இன்று திறமை வாய்ந்த மக்கள் தலைவா்கள் அதாவது புகழ்வாய்ந்த மகாத்மாக்கள் யாரெல்லாம் இருக்கிறாா்களோ அவா்கள் நன்றாக சொற்பொழிவாற்றுவதோடு மக்களுக்கான அப்படிப்பட்ட கடிதங்களையும் எழுதுகிறாா்கள். அதை மனிதா்கள் தங்கள் வாழ்விற்கான விலைமதிப்பற்ற பொக்கிஷம் என உணா்ந்து அதை பத்திரப்படுத்தி வைக்கிறாா்கள். இந்த கருத்து கடிதம் எழுதுவதைக் குறித்து சொல்லப்படுகிறது. யாருக்கு இந்த கலை வாய்க்கப்பட்டிருக்கிறதோ அவா்கள் தங்கள் கடிதம் மூலமாக மனிதா்களுடைய சிந்தனையை பக்குவப்படுத்தி விடுகிறாா்கள். அவா்கள் சமஸ்காரங்களை மாற்றி விடுகிறாா்கள், அவா்கள் தூர அமா்ந்து கொண்டே எப்படியெல்லாம் மற்றவா்களை நடத்துகிறாா்கள், தங்கள் மாா்கத்தை விளங்க வைக்கிறாா்கள், எந்த நல்ல உத்தேசத்திற்காக பிரேரணை தந்தாா்களோ அந்த உன்னத இலட்சியத்திற்கு மக்களை உதவி செய்பவா்களாக்கி அவரை சௌபாக்கியசாலிகளாக உருவாக்குகிறாா்கள். ஒரு மனிதா் எந்த அளவு குணவானாக, ஞானமுடையவனாக, உயா்ந்த சிந்தை உடையவராக அல்லது பிறா்நலம் விரும்பியாக இருக்கிறாரோ, அது அவருடைய பேச்சு அல்லது எழுத்தில் தெரிந்துவிடும். உயா்ந்த மனிதா்களுடைய பேச்சு அல்லது எழுத்து வரலாற்றில் ஒரு புதிய மாற்றத்தை ஏற்படுத்தக்

கூடியதாக அமைந்து விடுகிறது அதாவது இலட்சம் அல்லது கோடிக்கணக்கான மனிதர்களிடத்தில் பல நூறாண்டுகள் வரை அவரது பிரபாவம் நீடித்திருக்கிறது. கீதை கூட ஒரு சொற்பொழிவாகத்தானே இருக்கிறது. எத்தனை நூற்றாண்டுகளாக மனிதர்கள் பயபக்தியோடு படிக்கிறார்கள் அல்லது அதை தனது வாழ்வின் வழிகாட்டியாகக் கருதி அதன்படி நடந்து வருகிறார்கள். இந்திராகாந்தியின் அரசியல் வாழ்விற்கு அல்லது அவருக்கு கிடைத்த சமூக அந்தஸ்திற்கு அடிப்படையாக விளங்கியது அவருடைய தந்தையான நேரு அவர்கள் தன் புதல்விக்கு எழுதிய கடிதங்களே.

நடைமுறை வாழ்வில் பாரக்கப்போனால் எந்த மனிதர் தனது கருத்தை பிறருக்கு பொருத்தமாக, பிறர் ஏற்கும்படி செய்ய அறிந்திருக்கிறாரோ, அவருடைய பல காரியங்கள் செய்து முடிக்கப்படுகின்றன. யாரால் தனது விசயங்களை பிறருக்கு முன்னால் தெளிவாக எடுத்து வைக்க முடிவதில்லையோ, தனது அபிப்ராயத்தின் மகத்துவத்தை, தனது பொருளின் மதிப்பை, தனது கருத்தின் யதார்த்தத்தை விளங்க வைக்க முடிவதில்லையோ அவர் எல்லா இடங்களிலும் தோல்வி அடைகிறார். இப்படியாக, யார் தனது மனுவை, தனது யோசனையை, தனது நிஜ கடிதத்தை சரியாக தயாரிக்கிறாரோ, அவரது செயல் வெற்றிகரமாகிறது. அதாவது ஒரு நல்ல பேச்சாளராவது, நல்ல எழுத்தாளராவது என்பது வாழ்வின் வெற்றிக்கான ஒரு பெரிய சாதனமாக, உயர்ந்த செயலைச் செய்வதில் பெரிய உதவியாக அல்லது தனது வளர்ச்சிக்கான சாதனமாக விளங்குகிறது. எனவே வாழ்வின் உயர்வுக்கு மனம் மற்றும் செயலோடு கூடவே வாக்கிற்கும் முக்கிய இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் மனிதனது பெரும்பான்மையான கர்ம கணக்குகள் அதாவது சமஸ்காரக் கணக்குகள் அவனது வார்த்தைகளால் உருவாகிறது.

## கடிதம் எழுதும் கலைக்கு வேண்டிய அவசிய குணங்கள்

இந்தக் கலையில் நிறைவு பெறுவதற்கு இந்த குணங்கள் எல்லாம் அவசியம் என்பதை கூர்ந்து நோக்கின் நீங்கள் இந்த நிர்ணயத்திற்கு வருவீர்கள் (1) இனிமை (2) சரளம் (3) பலம் (4) ரமணீகம் (5) பணிவு (6) கம்பீரம் (7) சகாயம் (8) சத்தியம் அல்லது தூய்மை அல்லது நேர்மை (9) தைரியம் (10) அறிவு மற்றம் சிந்தனைத்திறன் (11) நம்பிக்கை (12) சினேகம், தன்னவர் மற்றும் அனுகூல பாவனை (13) ஊக்க உற்சாகம் (14) தொலைநோக்கு பார்வை.

யார் இனிமையாகப் பேசுகிறார்களோ, அவர்களுடைய வார்த்தைகளைக் கேட்க மனிதர்கள் விரும்புவார்கள். யார் சரள சுபாவத்தோடு பேசுகிறார்களோ, அவர்மீது நம்பிக்கை கொள்வதோடு அவர்களை நேசிக்கவும் செய்வார்கள். யாருடைய பேச்சில் வலிமை இருக்கிறதோ அவர்களால் மக்கள் கவரப்படுகிறார்கள் மேலும் அவர்களது வார்த்தை நினைவில் இடம்பிடித்துவிடுகிறது அதாவது அவர்களை வசப்படுத்துகிறது. வசீகரத்தின் மூலம் மனிதர்கள் பிறருடைய மனதை மகிழச்செய்து, மனநிலையை சீர்செய்து அவர்களை சக்திசாலிகளாக அல்லது கருத்துக்களை கிரகிப்பவர்களாக ஆக்கி விடுகிறார்கள் அதாவது மற்றவர்களை மகிழவைத்து தனது விசயத்தை இனிக்க வைத்து விடுகிறார். பணிவுடைய மனிதருக்கு மக்கள் தலைவணங்குகிறார்கள் அதாவது அவரை மகான் என அங்கீகரிக்கிறார்கள். கம்பீரமுடைய மனிதனின் பிரபாவம் பிறரிடத்திலும் ஏற்படுகிறது மேலும் மனிதர்கள் அவரிடம் தங்களது மனதின் விசயங்களையும் எடுத்துரைக்க தயாராகி விடுகிறார்கள். யாரிடம் பிறருக்கு உதவும் குணம் இருக்கிறதோ, அவருடைய பேச்சு அர்ப்பணமாகத் தகுந்ததாகத் தெரிகிறது அது இதயத்தை வருடுகிறது அதாவது அது வறண்டதாகத் தெரியாது. எந்த மனிதனுடைய வார்த்தைகளில் உண்மையும் நேர்மையும் இருக்கிறதோ, அவருடைய கருத்திற்கு மக்கள் மதிப்பபளிக்கிறார்கள். யார் பொறுமைசாலியோ மேலும் எடைபோட்டு அதாவது நன்கு சிந்தித்து பேசுகிறாரோ, அவர்கள் அதிகம் பேசுவதில் இருந்து விலகிவிடுகிறார்கள். நிறைய சச்சரவுகளில் இருந்து பாதுகாப்பாக இருக்கிறார்கள் மேலும் அனைவரிடமும் அவரது மென்மையின், பொறுமையின், தைரியத்தின் பிரபாவம் ஏற்படுகிறது. யாருடைய பேச்சு-வார்த்தை அல்லது சொற்பொழிவில் ஞானம் நிறைந்திருக்கிறதோ, புதுமை, ஆழம், விலைமதிப்பற்ற அல்லது உயர்ந்த சிந்தனை நிறைந்து

இருக்கிறதோ, அவரை மக்கள் அதிக புத்திமானாக, அறிவாளியாக, மேலும் சிந்தனையாளராக பார்க்கிறார்கள். மக்கள் அவரிடம் அறிவுரை பெறுவதோடு அவரையே தலைவராகவும் ஏற்றுக்கொள்கிறார்கள். எந்த மனிதன் முழு நம்பிக்கையுடன் பேசுகிறாரோ, அவருடைய பேச்சில் இயற்கையாகவே பலமும், சக்தியும் இருக்கிறது மேலும் யார் அன்போடும் ஆத்மார்த்தமாகவும் பேசுகிறார்களோ, அவர்களுடைய பேச்சு அனைவர் மனதிலும் குடிகொண்டு விடுகிறது, புத்தியில் பதிந்து விடுகிறது அதாவது அவர்களை வசப்படுத்தி விடுகிறது. மட்டுமின்றி, யாருடைய மனம் உற்சாகமாகவும், உல்லாசமாகவும் இருக்கிறதோ அவர்களே பிறரிடத்திலும் ஞானத்தை அறியச்செய்ய முடிகிறது, மேன்மை பெறும்படி உயர்த்த முடிகிறது, மேலும் யார் தொலைநோக்கு பார்வை உடையவராக இருக்கிறாரோ, அவருடைய சொல்லுக்கே மகத்துவம் கிடைக்கிறது. இப்படியாக, இந்த எல்லா குணங்களும் யாரிடம் இருக்கிறதோ, அவர்களே இந்தக் கலைக்கு சுவாமியாகிறார்.

இந்த குணங்களெல்லாம் யோகப்பயிற்சியினால் மட்டுமே வரமுடியும் என்பது தெளிவு. ஏனெனில் நம்பிக்கையே யோகத்தின் அடித்தளம், பிறர்மீது காட்டும் நல்லுணர்வும் கூட 'சிவபெருமானை' அதாவது கல்யாணகாரி தந்தையான பரமாத்மாவை நினைவு செய்வதால் மட்டுமே வருகிறது. மேலும் அந்த உண்மையான பிரபுவின் நினைவின் மூலம் மனதில் சரளம், தூய்மை, உண்மை ஆகிய குணங்கள் உருவாகிறது அதாவது பேச்சில் சக்தி, வலிமை அதாவது கூர்மை நிறைகிறது. பரமாத்மாவோடு யோகத்தில் இணைந்திருப்பதே மனிதனது உண்மையான தேவையாக இருக்கிறது. அதனால்தான் பரமாத்மாவின் கருணை இருக்கும்போது ஊமையால் கூட பேசமுடியும் என்று சொல்லப்படுகிறது.

## 9. சிந்தனைக்கலை மற்றும் உருவாக்கக்கலை

### (The art of thinking and creating)

சிந்தனைகூட ஒரு பெரிய சக்தியாக இருக்கிறது. யாருக்கு சிந்திக்கத் தெரிந்து இருக்கிறதோ, அவர்கள் ஒவ்வொரு பிரச்சனைக்கும் ஏதாவது ஒரு நல்ல தீர்வை கண்டுபிடித்து விடுகிறார்கள். சிந்தனை சக்தியே ஜடத்திற்கும், சைத்தன்யத்திற்கும் உள்ள வித்தியாசமாக இருக்கிறது. சைத்தன்யத்தில் சிந்திக்கும் சக்தி இருக்கும். சிந்திப்பது, புரிந்துகொள்வது இவைகளோடு அவற்றைப் புதுப்பிக்கும் எண்ணமும் சைத்தன்யத்தில் ஏற்படும். அதாவது சிந்தனையே ஜீவனாக இருக்கிறது. ஆர்க்கிமிடீஸ் ஒரு பெரிய விஞ்ஞானியாக இருந்தார், ''என்னிடம் ஒரு மிகப் பெரிய, மிக உறுதிவாய்ந்த நெம்புகோலைக் கொடுங்கள், அப்படித் தந்தால் அந்த நெம்புகோலைக் கொண்டு நான் உலகை அசைத்துக் காட்டுவேன்'' எனச் சொன்னார். உண்மையில் அப்படிப்பட்ட நெம்புகோல் ஒரு கற்பனையே அதாவது வெறும் யோசனை மட்டுமே. எனினும் அந்த யோசனையானது அவ்வப்போது இந்த உலக மக்களின் சிந்தனை மற்றும் வாதங்களில் மிக உறுதியான இடத்தை ஆக்கிரமித்துக்கொண்டது. அதாவது அவர் அந்த யோசனையைக் கொண்டு இந்த உலகையே அசைத்துவிட்டார். இந்த உலகத்தில் எத்தனை பொருட்கள் செயல்கள் உருவாக்கப்பட்டதோ, அதற்கான எண்ணம் முதலில் உருவாக்கப்பட்டது அதாவது அதைக்குறித்து சிந்திக்கப்பட்டது. உலகத்தில் உள்ள எல்லா கூச்சல்-குழப்பங்களும், எல்லாப் பொருட்களும் எல்லா விளைவுகளும் சிந்தனையின் பலனாக உருவானவைகளே என்பதைப் பார்க்கும்போது, எந்த அளவு இந்த உலகம் சிந்தனையை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது என்பது விளங்கும்! 'மனிதர்களுடைய சிந்தனை எப்படி இருக்கிறதோ அப்படியே அவர்களுடைய நடவடிக்கைகளும் இருக்கும்' என மனிதர்களை மதிப்பீடு செய்பவர்கள் சொல்கிறார்கள். 'எளிய வாழ்வு மற்றும் உயர்ந்த

சிந்தனையே மனிதனின் மகோன்னதத்திற்கு அடிப்படையாகும்' என உயர்வான வாழ்க்கையைப் பற்றி அவர்கள் சொல்கிறார்கள். எந்த மனிதன் சிந்தனை செய்வதில்லையோ அவருடைய வாழ்க்கை செம்மறியாட்டைப் போல அதாவது உயிரற்றதைப்போலக் காணப்படும். சிந்திப்பவர் யாரோ, அவரே ஏதாவது புதிய திட்டத்தை தயாரிக்கிறார், புதியதைக் கண்டுபிடிக்கிறார். புதிய ஞான ரத்தினங்களை உலகிற்குத் தருகிறார் மேலும் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வைச் சொல்லி பொது ஜன வாழ்வை ஆபத்திலிருந்து காப்பாற்றுகிறார். யார் சிந்தனைத் திறன் மிக்கவர்களாக இருக்கிறார்களோ, அவர்களே இன்று தலையின் கிரீடமாக அதாவது வி.ஐ.பிக்களாக உருவாகி இருக்கிறார்கள். எந்த ஜாதியில், சமூகத்தில், தேசத்தில் அல்லது இயக்கத்தில் நல்ல சிந்தனையாளர்கள் இல்லையோ, அது பின்தங்கி இருக்கும். யாருடைய சிந்தனை செயல்படுவதில்லையோ அவர்களை அறிவில்லாதவர்கள் என்றோ தாழ்ந்தவர்கள் என்றோ சொல்கிறார்கள். அவர்களுடைய வளர்ச்சி நின்று விடுகிறது. அவர்கள் வாழுமிடத்தில் எவ்வித அனுபவ இரத்தினங்களையும் பெற முடிவதில்லை. அப்படி சிந்தனைகூட ஒரு பெரிய கலையாக இருக்கிறது. பின்னர் பலருக்கு அவர்களுடைய சிந்தனை நேரான பாதையில் செல்கிறது. அவர்கள் யோசிக்கவும், நிர்ணயம் செய்யவும் அதாவது முடிவை எட்டவும் உரிய வழியை அறிந்திருக்கிறார்கள். பலருடைய சிந்தனை சக்தி சிதைந்து போய் இருக்கிறது. அவர்களுக்கு எந்த குறிக்கோளும் இருப்பதில்லை. இலட்சியம் இருப்பதில்லை அதோடு மற்ற பிற குதர்க்கமான, விரோதமான பாவனையால் பீடிக்கப்பட்டு சிந்தனை செய்கிறார்கள். அவர்களுடைய சிந்திக்கும் விதம் லாபம் தருவதாக இருப்பதில்லை. இப்படியாக உயரும் கலையே உண்மையில் கலையாக இருக்கிறது. பயனற்ற, முறையற்ற மேலும் விகாரம் நிறைந்த சிந்தனை – சக்தியை அழிப்பதாக உள்ளது.

## இந்தக் கலைக்காக எந்தெந்த குணங்களை கடைப்பிடிப்பது அவசியம்?

இந்தக் கலையில் நிபுணத்துவம் பெறுவதற்கு பின் வரும் குணங்கள் மிகவும் அவசியம் என்பதை நீங்கள் கவனம் கொடுப்பதன் மூலம் அறிவீர்கள் (1) கேட்ட விசயங்களைப் பற்றிய சிந்தனை (2) முன்னேற வேண்டும் என்ற எண்ணம் அதாவது வாழ்க்கையில் ஏதாவது உயர்ந்த செயலைச் செய்ய வேண்டும் என்ற குறிக்கோள் (3) நேரத்திற்கு மதிப்பளிக்கும் பண்பு (4) ஒருமுகப்பட்ட மனநிலை (5) பரந்த மனம் (6) தெளிந்த உள்ளம் (7) சிந்தனைக்கு கால்புள்ளி (,), முற்றுப்புள்ளி (.), கேள்விக்குறி, ஆச்சரியக்குறி ஆகியவற்றை சரியான இடத்தில், சரியான நேரத்தில் வைக்கும் தகுதி (8) சக்தியை விரயமாக்காமல் இருக்கும் சுபாவம் (9) புதிது புதிதான உபயோகம், வித்தியாசமான அல்லது சாகசமான காரியங்களைச் செய்து புது இடத்தில் பிரவேசிக்கும் குணம் (10) தனிமை விரும்பி.

எந்த மனிதர் விசயத்தின் ஆழத்திற்குள் செல்கிறாரோ, சிந்தனை செய்கிறாரோ, அவருக்கே முத்துக்கள் கிடைக்கின்றது. 'யார் நீரின் ஆழத்திற்குள் போகிறார்களோ அவர்களுக்கே அதிக வருமானம்' என பழமொழியும் இருக்கிறது. வாழ்க்கையில் முன்னேறுவதற்கு கொஞ்சம் சரியான முயற்சியும் செய்ய வேண்டும். எப்போது மனிதன் தனது பழைய நிலையில் இருந்து அதாவது தற்போது இருந்து கொண்டிருக்கும் நிலையை விடுத்து எப்போது முன்னேற வேண்டும் என்ற எண்ணம் கொள்கிறாரோ அப்போதே அவருடைய சிந்தனை துவங்கும். அப்போதே அவரது மனதில் என்ன செய்வது, எப்படி செய்வது …? என கேள்விகள் எழுகிறது. இந்தக் கேள்விகள் எழுவதாலேயே அவருடைய எண்ணம் சிந்தனையில் செல்கிறது. அப்போதே அவர் ஏதாவது புதிய எண்ணத்தை உலகின் முன்னே வைக்கிறார் அதாவது புதிய திட்டங்கள் உருவாக்கப்படுகிறது, புதிய விதிமுறைகள் உருவாக்கப்படுகிறது அல்லது ஏதாவது புதிய, உபயோகமான அதாவது பயனுள்ள பொருளை உருவாக்கி தானும் மகிழ்ச்சி அடைகிறார் மேலும் சமூகத்திடமும் அவர் கொடுப்பது நீண்ட காலம் வரை நிலையாக இருந்து விடுகிறது. எந்த மனிதர் தனது வாழ்வில் ஏதாவது உயர்ந்த அல்லது விசேசமான செயலைச் செய்வதற்கான எண்ணத்தை தன்னிடம் வைத்திருப்பதில்லையோ, யார் தனது தற்போதய நிலையிலேயே தொடர்ந்து

இருக்க விரும்புகிறாரோ, அவர் அலட்சியம் மற்றும் போகங்களிலேயே தனது வாழ்வை வாழ்ந்து முடித்து விடுவார். அந்த போகப் பிரிய மனிதர் உன்னதத்தின் சிகரத்தை எட்டவே முடியாது. சமூகத்தின் முன்னால் எந்த புதிய செயலையோ, புதிய தடத்தையோ, புதிய உத்தியையோ முன்வைக்க முடியாது பதிலாக சென்ற பாதையிலேயே நடந்து நடந்து நாளை கழிக்கிறார்கள். பின்னர், யார் நேரத்திற்கு மதிப்பளிப்பதில்லையோ அவர் தனது வாழ்வின் அதிகமான விலைமதிப்பற்ற தருனங்கள், தங்கமான வாய்ப்புகள், இதமான நாட்கள், அனுகூலமான சூழ்நிலைகள் அனைத்தையும் இழந்துவிடுகிறார்கள். அவர்கள் தங்கள் சிந்தனை சக்தியை ஓரிடத்தில் ஒருமுகப்படுத்துவதற்குப் பதிலாக அதை சிதற விடுகிறார்கள். அவர்கள் ஓரிடத்தில் இருபதடி கிணறு தோண்டி தண்ணீர் பெறுவதற்குப் பதிலாக இருபது இடங்களில் ஒவ்வொரு அடியாகத் தோண்டி எங்கும் எதுவும் கிடைக்காமல் போகக்கூடிய மனிதர்களை ஒத்தவர்கள். மாறாக, யாருடைய பார்வை விசாலமாக இருக்கிறதோ, சிந்தனைக்களம் பரந்து விரிந்து காணப்படுகிறதோ, அவர்கள் சிறுமைக்குள் சிக்கி இருக்கமாட்டார்கள், தான் கட்டுக்குள் இருப்பதாக உணரமாட்டார்கள், தனது முன் கதவு மூடி இருக்காது அதாவது விசாலமான மனித சமூகத்தை தன் மனக்கண் முன் வைத்து மிகப் பெரிய சிந்தனை செய்வார்கள். அதாவது இடம், சூழ்நிலை, ஜாதி, மதம் இவைகளுக்கெல்லாம் அப்பால் இருந்து சிந்திப்பார்கள். இதற்கு மேலும், யாருடைய மனம் தெளிவாக இருக்கிறதோ, கவலை, கற்பனை, வஞ்ஜனை அல்லது வேற்றுமை இவைகள் இல்லாமல் இருக்கிறதோ அந்த அளவு அதிகமாக அவரது சிந்தனைகள் மையத்தை நோக்கி அதாவது ஒருமுகப்பட்டு இருப்பதற்கான வசதிகள் இருக்கும். இப்படியாக சிந்தனை செய்யும் கலையில் எங்கே நிறுத்த வேண்டும் எங்கே அதிகம் யோசிக்க வேண்டும் என்ற குணமும் அடங்கியிருக்கிறது இல்லையென்றால், மகிழ்ச்சியை இழந்து மனிதன் தனது எண்ணங்களின் தொடர்ந்த ஓட்டத்தால் தானே கவலையில் மூழ்கிவிடுவார்கள். ஏகாந்தத்தில் இருந்து சிந்தனைக் கடலை கடையும்போது சூழ்நிலையின் உதவியும் கிடைப்பது நல்ல செய்தியாக இருக்கிறது எனவே இந்த குணமும்கூட லாபம் தருவதாகவே உள்ளது. எனினும் பல சூழ்நிலைகள்கூட சிந்தனை எழுச்சியை அதாவது உயர்ந்த சிந்தனை எழக் காரணமாக அமைகிறது. அதாவது அவைகளும் எண்ணங்கள் தோன்ற உதவியாக இருப்பது நிரூபணமாகிறது. அதுமட்டுமில்லாமல், இந்த குணங்கள் எல்லாம் யாரிடம் இருக்கிறதோ அவர்களே சிந்தனைத் திறன் மிக்கவராக, அதாவது சிந்தனைக் கலையில் நிறைந்த மனிதராகத் திகழ்கிறார் மேலும் அப்படிப்பட்டவரே பல புதியவற்றை உருவாக்க கூடியவராக இருக்கிறார்.

ஆனால் எப்போது மனிதன் யோகப் பயிற்சி செய்கிறானோ அப்போதே இந்த குணங்கள் எல்லாவற்றையும் தனக்குள் கொண்டுவர முடியும். யோகப்பயிற்சி செய்பவரே தனிமை விரும்பியாக, சரள குணமுடையவராக, மனம் ஒருமுகப்பட்டவராக, கடின உழைப்பாளராக மேலும் சிந்தனையாளராக இருப்பார்.

## 10. நன்மை செய்யும் கலை மற்றும் தொண்டாற்றும் கலை

### (The art of doing social service and spiritual welfare)

இதைப் படித்தவுடன் இதுவும் ஒரு கலையா? எனச் சிலர் யோசிக்கக்கூடும். எனினும் ஆழமாகச் சிந்திக்கும்போது, உண்மையில் இதுவும் ஒரு மிகப்பெரிய கலையே என்ற முடிவிற்கு எல்லோரும் வரவேண்டியதாக இருக்கிறது. இந்தக் கலையை கோடான கோடி மனிதர்களில், வெகு சில மிக உத்தமமான மனிதர்களுடைய வாழ்க்கையில் மட்டுமே நாம் பார்க்க முடியும். இன்று இந்தக் கலையில் தான் எல்லா மனிதர்களும் பலவீனமாக இருந்து வருகிறார்கள். அதனால் தான் ஒருவர் பிறருக்கு துன்பம் கொடுத்துக் கொண்டே இருக்கிறார்கள். ஒரு மகாத்மா காந்தியிடம் சேவை செய்யும் உணர்வு இருந்தது. அதைக்

கொண்டு அவர் ஒரு மிகப் பெரிய ஜன சமூகத்தை ஒன்று திரட்டி இருந்தது எல்லோருக்கும் தெரிந்ததே. ஆனால் தொண்டாற்றும் கலை தொண்டுணர்வைக் காட்டிலும் உயர்ந்த மதிப்புடையது. ஏனெனில் ‘கலை’ என்பது எந்தக் காரியத்தையும் திறமையோடு செய்வது, எந்தக் கல்வியிலும் நிபுணத்துவம் பெறுவது, எந்தக் குணத்திலும் குன்றாக இருப்பது, எந்த விசேசத்திற்கும் அதிபதியாக இருப்பது போன்ற சிறப்பைக் குறிக்கும் வாசகமாக இருக்கிறது.

பலர் தனது வாழ்வின் ஆரம்ப கட்டத்தில் “நான் பெரியவனாகி உயர்ந்த பல காரியங்களைச் சாதிப்பேன், அதாவது மக்கள் நன்மைக்காக இன்னின்ன காரியங்களைச் செய்வேன்” என்றெல்லாம் நினைக்கிறார்கள். ஆனால் அப்படி நினைத்த கொஞ்ச காலத்திலேயே அவர்கள் சமூகத்தின் கெட்ட சூழ்நிலைகளின் பாதிப்பிற்கு ஆளாகிவிடுகிறார்கள். யாரிடம் இந்த கலை இருக்கிறதோ அவர் கைதேர்ந்தவராக இருக்கிறார் மேலும் அந்த ஈடுபாட்டில் உறுதியாக அதாவது பேரறிவாளனாக இருக்கிறார். எந்தவொரு நல்ல செயல் செய்ய வேண்டும் என்றாலும் அதிகமான சோதனைகளை கடந்து செல்ல வேண்டியிருக்கிறது. எந்தெந்த கஷ்டங்கள் முன்னால் வருகிறதோ அவைகள் அனைத்திற்கும் தீர்வுகளை காண வேண்டியதாக இருக்கிறது. அவச்சொல்லையும் கேட்க வேண்டியதாக இருக்கிறது. மேலும் ஒவ்வொரு அடியிலும் செத்து செத்துப் பிழைக்க வேண்டியதாக இருக்கிறது. பணிந்துபோக வேண்டியதாக இருக்கிறது. அதாவது எல்லாப் பிரச்சினைகளிலும் பிறருடய நன்மைகளை மட்டும் யோசிப்பதோடு கூடவே அவர் தம்மையும் காத்துக்கொள்ள ஏதாவது உறுதியான செயல் செய்தாக வேண்டியிருக்கிறது. தனது உடல், மனம், பொருளை ஈடுபடுத்த வேண்டியதாக இருக்கிறது. தியாகம், பணிவு, பொறுமை, தன்னலமின்மை மேலும் நற்சிந்தனையின் நடைமுறை சொரூபமாக இருப்பதோடு அதை சேவைக் காரியத்தின் களம் வரை கொண்டு சேர்க்க வேண்டியிருக்கிறது. இவைகளை நிறைவேற்ற நிறைய சக்திகள் மற்றும் திறமைகள் அவசியமாகிறது. இப்படிப்பட்ட இந்த செயலை இந்தக் கலையின் சுவாமியால் மட்டுமே செய்ய முடியும். யாரிடத்தில் இந்தக் கலை எந்த அளவு அதிகமாக இருக்கிறதோ, அவர் அந்த அளவு பெரிய மகானாக ஏற்றுக் கொள்ளப்படுகிறார்.

ஹஸ்ரத் இசா அவர்கள், புத்தபிரான் மேலும் பலப்பல தர்ம ஸ்தாபகர்கள் தத்தமது பார்வையில் நன்மை விளைவிக்கும் சிந்தனைகளை, செயல்களை செய்து வந்தார்கள். அவர்கள் அதற்காக நிறைய கஷ்டங்களை சகித்துக்கொள்ள வேண்டியதாக இருந்ததை வரலாறு சொல்கிறது. யாருக்கு நாம் நன்மை செய்ய போகிறோமோ, அவரே நமக்கு விரோதமாகச் செயல்பட்டால், நம்மிடம் அடாவடி செய்தால் நமது மனதில் என்ன தோன்றும்? ஆனால் அந்த மகான்கள் இப்படிப்பட்ட செயல்கள் மீது கவனம் கொடுக்கவில்லை. அதனால் தானே அவர்கள் மகான்கள் என அழைக்கப்படுகிறார்கள் அதுமட்டுமில்லாமல் மனிதர்கள் தங்கள் இதயங்களில் இடம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அவர்களின் அந்தச் செயல்களுக்குப் பின்னரும் இந்த சமூக மனிதர்கள் விஷ-விகாரங்களில் மூழ்கித் திளைத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். சமூகத்திற்கு ஏதாவது நிலையான பயன்தரும் செயலைச் செய்வதென்பது ஒரு பெரிய கலையின் சுவாமியின் செயலாகவே இருக்க முடியும் என்பது இவைகளில் இருந்து நாம் தெரிந்து கொள்ளலாம். அவர்களையே மனிதர்களில் ‘பிரம்மா’ என்றும் சொல்கிறார்கள் மேலும் எப்போது ஒரு நல்ல விசயத்தை ஒருவரது மனதில் பதியச் செய்ய வேண்டும் எனும்போது அல்லது நல்ல புத்தி தந்து அவருக்கு நன்மை செய்ய வேண்டும் எனும்போது “பிரம்மாவே இறங்கி வந்தால் தான் இவர்களுக்கு நன்மை ஏற்படும்” என்று சொல்கிறார்கள். இதன் விளக்கம் என்னவென்றால், பரமாத்மாவிற்குப் பிறகு இந்தக் கலை இயல்பாக பிரம்மாவிடம் இருந்து வந்தது என்பதே.

தாய் தந்தையர்கள் எப்போதும் தமது குழந்தைகளுக்கு நல்லதையே விரும்புவார்கள் மேலும் அவர்கள் தங்கள் பிள்ளைகளின் உயர்வுக்காக அயராது பாடுபடவும் செய்கிறார்கள். எனினும் நிறைய குழந்தைகள் பெரியவரான பிறகு பிறரைத் திருத்துவது, உலகைத் தூய்மையாக்குவது, பிறருக்கு பணி செய்து உயர்வது அல்லது அரும்பணி செய்து தன் பெயரை நிலைநாட்டுவது போன்ற எந்த செயலையும் செய்வதைப் பெரும்பாலும்

பார்க்கமுடிவதில்லை. மாணவன் மகான் ஆக வேண்டும் என்று ஆசிரியர் விரும்புகிறார். எனினும் அவரது விருப்பமும், முயற்சியும் வெற்றி பெறுவதில்லை. தனது சிஷ்யன் சாது சுபாவமுடையவராக வேண்டும் என்று குரு விரும்புகிறார். சமூகத்தை உயர்த்த வேண்டும் என்று தலைவர்கள் விரும்புகிறார்கள், என்றாலும் நடைமுறையில் கான்பதென்ன? இன்று கருப்புப் பணம், கலப்படம், இலஞ்சம், பொய், துரோகம் ஆகியவைகளே சமூகத்தை இயக்குபவைகளாக இருக்கின்றன. தாய், தந்தை, ஆசிரியர், குரு, தலைவர் முதலியோர் விருப்பப்பட்டும் நன்மை செய்ய முடியாமல் போவதேன்? சக்தி, உயர்ந்த பண்புகள், முன்னுதாரண வாழ்வு, களைப்பற்ற சேவை அல்லது மக்கள்பணி முதலியவைகளில் அவர்களிடம் காணப்படும் குறைபாடுகளே அதாவது அவர்கள் இந்தக் கலைகளில் தேர்ச்சி பெறாமல் இருப்பதே அதற்குக் காரணமாக இருக்கிறது. எல்லோருக்கும் நன்மை செய்வதற்கான கலையானது ஒரு பரமபிதா பரமாத்மாவிடம் மட்டுமே இருக்கிறது. இந்தக் காரணத்தினால்தான் அவரது பெயரே 'சிவா' அதாவது கல்யாணகாரி என சொல்லப்படுகிறது. அவரையே தாய்-தந்தை, பரம ஆசிரியர், பரம சத்குரு மற்றும் உலக நாயகன் முதலிய சம்பந்தங்களாலும் "அம்மாவும் நீயே அப்பாவும் நீயே ......" முதலிய சப்தங்களாலும் நினைவு செய்யப்படுகிறது. ஏனெனில் அவரே இந்த சம்மந்தங்களின் சாமர்த்தியமும் அதனை பரிபூரண வடிவில் நிறைவேற்றி நன்மை செய்பவராகவும் இருக்கிறார். அவருக்குப் பிறகு மனித சிருஷ்டியில், சாகார ரூபத்தில் பிரஜாபிதா பிரம்மாவே அப்படி இருக்கிறார் அவரை ஜகத்பிதா, ஞானத்தின் ஆதி-வள்ளல், சிரேஷ்ட குரு முதலிய ரூபத்தில் பக்தகோடிகளும் நினைவு செய்கிறார்கள். ஏனெனில் அவர்தான் சிவதந்தையவர்களுக்கு சாகார கருவியாக இருந்து உலக நன்மை செய்வதற்கு அதாவது சேவை செய்வதற்கு உகந்த கலையம்சம் நிறைந்தவராக இருக்கிறார் என்பது நிரூபணமாகி இருக்கிறது. அவரது ஒவ்வொரு எண்ணமும், ஒவ்வொரு சொல்லும், ஒவ்வொரு அடியும், உலக நன்மைக்காகவே இருந்து வந்தது என்பதை நான் எனது அனுபவத்தில் கண்டு வந்திருக்கிறேன்.

## இந்தக் கலை உடையோரின் அடையாளம்

யாரிடம் தனது நிலை மிக உயர்ந்ததாக இருக்கிறதோ அவரே பிறரது நன்மைக்கான காரியங்களைச் செய்யமுடியும் என்பதை நீங்கள் உற்று நோக்கினால் தெரிந்து கொள்வீர்கள். யாரிடம் சாமார்த்தியம் இருக்கிறதோ அவரே பிறருக்கு நன்மை செய்யும் சேவையில் வெற்றிபெற முடியும். அதாவது இந்தக் கலை ஆத்மீக சக்தி மற்றும் தெய்வீக நிலையின் சூசகமாக இருக்கிறது. யார் பிறருக்காக நல்லதை நினைக்கிறார்களோ, யார் அனைவருக்கும் சிறந்ததே நடக்க வேண்டும் என்று விரும்புகிறார்களோ, 'எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும்' என்ற எண்ணத்தில் செயல்படுகிறார்களோ, 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்பது யாருடைய மனதின் அபிலாசையாக, இதயத்தின் குரலாக, இதய வீணையாக இருக்கிறதோ அவரே இப்படிப்பட்ட செயல்களைச் செய்ய முடியும். 'உயிர்களிடத்து நற்சிந்தனை வேண்டும், உலகத்தில் எல்லாம் நல்லதாக நடக்க வேண்டும்' என்பது யாருடைய சுலோகமாக மட்டும் இல்லாமல், சிந்தனையின் உயிரோட்டமாக விளங்குகிறதோ, அவர்களே நன்மை செய்யும் காரியத்தில் வெற்றி பெற முடியும். "நான் அனைவருக்கும் நன்மை தரும் செயலை எப்படி செய்ய முடியும்?" என்ற சுப சிந்தனை அப்படிப்பட்ட மனிதரின் அந்தராத்மாவில் எப்போதும் செயல்பட்டுக்கொண்டே இருக்கும். அதாவது அவர்களுடைய மனம் இந்த எண்ணங்களினால் எப்போதும் நிறைந்திருக்கும். வேறு எந்தவிதமான யோசனைகளும் அவர்களுக்குத் தோன்றவே தோன்றாது. தீமை செய்பவருக்கும் நன்மையே செய்ய வேண்டும். நிந்திப்பவரையும் நன்பராக கருதவேண்டும், நன்றிகெட்டவர் மீதும் வெறுப்படையக்கூடாது. எல்லோருக்கும் தொண்டு செய்ய வேண்டும். சேவை மேலும் சேவையே செய்ய வேண்டும் என்பதே அவர்கள் விருப்பமாக, எண்ணமாக இருக்கும். யாருக்கு சேவகம் செய்ய வேண்டுமோ, அவர்களை தனது மனம் என்ற கண்முன்னே அடிக்கடி கொண்டுவந்து 'சிவபாபா, இவர்களுடைய புத்தியின் பூட்டை திறந்துவிடுங்கள், அதாவது அவருடைய ஆன்மாவும் விழிப்படைந்து அவருடைய வாழ்வை உயர்ந்ததாக்கிக் கொள்ளட்டும்" எனச் சொல்வார்கள். அவர்கள் பிறருடைய அவகுணங்களை எண்ணாமல், அவரோடு ஏதாவது குணத்தின் மூலம்,

அன்பின் மூலம், ஆன்மீகத்தின் மூலம், நெருங்கிய சம்பந்தத்தை ஏற்படுத்தி, நல்ல வார்த்தைகளைச் சொல்லி, நட்புணர்வுடன் புரியவைத்து அவரை முன்னேற்றியே தீருவார்கள். எத்தனை பெரிய ஈடுபாடு, எத்தனை அதிக வேகம், எத்தனை கடின உழைப்பு இதற்கு தேவைப்படுகிறது என்று பாருங்கள்! யாரிடமாவது பகவானிடம் ஈடுபாட்டை ஏற்படுத்துவதற்கு முன்னால் தனது ஈடுபாடு உறுதியாக இருப்பது அவசியம். பிறரை மூழ்கச் செய்வதற்கு முன் தான் மூழ்கி இருப்பது அவசியமாகும். பிறருக்கு நற்கதி தரவேண்டும் என்றால் முதலில் அது தன்னிடம் அதிகமாக இருக்க வேண்டியது அவசியம்.

## இந்தக் கலைக்காக கீழ்கண்ட குணங்கள் இருக்க வேண்டியது அவசியம்

இப்படியாக, இந்தக் கலைக்காக முக்கியமாக இந்த குணங்கள் அல்லது சிறப்புகள் இருக்க வேண்டியது அவசியம் என்பதை நீங்கள் பார்க்கலாம் (1) நல்லெண்ணம், நற்சிந்தனை மற்றும் நற்செயல் (2) மக்களை ஒன்றுதிரட்டி வழிநடத்தல் மற்றும் தனது வாழ்வை நிரந்தரமாக முன்னேற்றல் (3) உற்சாகம் நிறைந்த, பிரேரணை தரக்கூடிய மகிழ்ச்சியான முகம் (4) பிரச்சினைகளை எதிர்கொள்ளும் அறிவு, சாமார்த்தியம் மற்றும் சாத்வீகம் (5) உடையாத நம்பிக்கை, வெல்லமுடியாத தைரியம் மேலும் இடைவிடாத செயல்திறம் (6) பெருந்தன்மை (7) தியாகம் (8) பணிவு (9) பொறுப்புணர்வு (10) முன்னுதாரன வாழ்வு (11) தன்னம்பிக்கை (12) நிலையான உற்சாகம்

யார் சதா பிறருக்காக நல்லதை நினைப்பவர்களாக இருக்கிறார்களோ, அவர்களுடைய புத்தி மக்கள் நன்மைக்காக ஏதேனும் திட்டமிடுவதிலேயே ஈடுபட்டிருக்கும். மேலும் அவர்களுடைய வாக்கு அல்லது செயல் நல்ல காரியத்திலேயே இயல்பாக இருந்து கொண்டிருக்கும். மேலும், யார் பிறருடைய நன்மைக்காக அல்லது உயர்வுக்காக செயல்பட விரும்புகிறார்களோ, அவர்கள் எப்போதும் மக்கள் ஒற்றுமைக்காக அக்கறை கொள்வார்கள். அதாவது தான் செய்வதைப் பார்த்து மற்றவர்களும் அப்படியே செய்வார்களேயானால் அவர்களுக்கு தாழ்வு அல்லது தீமை ஏற்பட்டுவிடக்கூடும் என்பதை அறிந்து மனம், சொல், செயலில் அப்படிப்பட்ட செயல் எதுவும் நடந்து விடக்கூடாது என்பதில் கவனம் செலுத்துவார்கள். அதாவது அவர்கள் ஆத்ம முன்னேற்றத்தின் மீது கவனம் செலுத்துவார்கள். தன்னுடைய வாழ்விலும் விழிப்புணர்வுடன் இருப்பார்கள். தனது தவறுகளைத் திருத்திக கொண்டே போவார்கள் அதேசமயம் ஏதேனும் தவறு நடந்து விட்டால் எல்லோர் முன்னும் அந்தத் தவறை ஒத்துக் கொள்வார்கள் அதனால் மற்றவர்கள் அதனை குணமாக ஏற்காமலும் அனுசரிக்காமலும் விட்டுவிடுவார்கள். அவர்கள் ஒவ்வொரு சூழ்நிலையிலும் சாத்வீகத்தையே பயன்படுத்துவார்கள் மற்றபடி வேறு எந்த பலவந்தமான வழியாலும் நன்மை ஏற்படவே முடியாது. மேலும் பிறரிடமும் நல்ல அபிப்ராயத்தை ஏற்படுத்த முடியாது என்பதை அறிவார்கள். அதாவது உயர்ந்த இலட்சியத்தின் வெற்றிக்காக அவர்கள் ஆத்மபலம், பிரபுவின் துணை மற்றும் நற்குணங்களோடு நடந்துகொள்வதையே சார்ந்து இருப்பார்கள் மேலும் அதில் தன்னம்பிக்கையை இழக்கமாட்டார்கள். சேவை செய்வதற்காக தியாகம், அர்ப்பணம், தயாளம் எல்லாம் சேவை செய்பவரிடம் இருக்க வேண்டியது அவசியம் என்பதும் திண்ணம்.

எனினும், இந்த குணங்களை எல்லாம் யோகத்தின் மூலமாகவே மனிதர்களிடம் கொண்டு வரமுடியும். எப்போது நன்மை செய்யக்கூடிய (சிவதந்தை) பரமபிதா பரமாத்மாவோடு புத்தியின் ஈடுபாடு இணைந்திருக்கிறதோ, அப்போதே மனித மனதில் பிறருக்கு நன்மை செய்வதற்கான ஆர்வம் உற்பத்தியாகும். அதற்காக ஏதாவது வழியையும் சிந்திப்பார். சாமார்த்தியமும் வெற்றியும் கிடைக்கும். மனிதன் எப்போது தேகவுணர்வை விட்டு விடுகிறானோ, தெய்வீக நிலையை பிரபுவிடம் இருந்து கிடைக்கும் செல்வம் என ஏற்றுக் கொள்கிறானோ, அப்போதே அவனிடம் தியாகம், தயாளம், தானம் அல்லது சேவை செய்யும் உணர்வு தோன்றும். அப்போது அவருடைய வாழ்வு களங்கமற்றதாகவும், உயர்ந்ததாகவும் ஆகிவிடும் மேலும் செயற்களத்தில் இறங்கி தனது சாத்வீக வாழ்க்கையால் பிறரிடத்திலும் சாத்வீகத்தை நிறைப்பார். அதாவது இந்த கலையை பெறுவதற்காகவும் பரமபிதா பரமாத்மா சிவதந்தையிடம் யோக நிலையில் இருக்க வேண்டும்.

# 11. மறைக்கும் வெளிப்படுத்தும் கலை

## (The art of concealing and revealing)

பரமாத்மாவின் புகழ்பாடும்போது ‘‘நீங்கள் தாங்களாகவே எல்லாவற்றையும் செய்துவிட்டு, தன்னைத்தானே மறைத்துக்கொள்கிறீர்கள்’’ என்று பக்தர்கள் சொல்கிறார்கள். மிகப்பெரிய செயலைச் செய்த முடித்த பிறகும் பண்புள்ள மனிதர்கள் தன்னை மறைத்துக் கொள்கிறார்கள். அதாவது எதுவும் செய்யாதது போல சாதாரணமாகவே இருந்துகொண்டு தனக்குக் கிடைத்த பெயர், புகழ், பெருமை முதலியவைகளை ஏற்றுக்கொள்ளாமல் எளிமையாக இருந்து விடுகிறார்கள். அதாவது தன்னை ஒளித்து வைத்து விடுகிறார்கள். இது ஒருபுறமிருக்க, மனிதர்களில் பலர் ஏதாவது ஒரு சிறிய செயலைச் செய்துவிட்டாலும் அதற்குப் பதிலாக பெரிய பெயர் சம்பாதிக்க விரும்புகிறார்கள். பிறர் தம் காதுபட புகழ்ந்து பேசுவதை கேட்க விரும்புகிறார்கள். அதாவது மக்கள் மத்தியில் உயர்ந்த இடத்தை பெற விரும்புகிறார்கள். இன்று சிலர் நாற்காலியின் மேல் ஆசை கொண்டிருக்கிறார்கள், சிலர் குருவின் சிம்மாசனத்திற்காக, சிலர் மரியாதைக்காக, சிலர் புகழுக்காக ஆசைப் படுகிறார்கள். ஆனால் பிரஜாபிதா பிரம்மா அவர்கள் தன்னை எப்படி மறைத்து வைத்திருந்தார் என்பதை நான் பார்த்திருந்தேன். இல்லையென்றால் ‘‘இந்தப் பெண் பிள்ளைகள் (பிரம்மாகுமாரிகள்) என்னைவிட திறமைசாலிகள்’’ என்று மற்றவர்களிடம் எப்படிச் சொன்னார். அல்லது ‘‘நானோ பாவ அழுக்குகள் நிறைந்தவனாக இருந்தேன், இந்தச் செயல்கள் எல்லாம் சிவதந்தையின் அற்புதங்கள்’’ என்று சொன்னார். ‘‘நானோ கிராமத்து மனிதனாக இருந்தேன், எனக்கு சிவபாபா அவர்கள் அரசபாக்கியத்தை கொடுத்து பெருமை தந்தார்’’ என சிலசமயங்களில் சொல்வதுண்டு. பிறகு ‘‘சிவபாபா வரவில்லை என்றால் எனக்கு என்ன தெரிந்திருக்கும்? நானோ துர்கதியடைந்து இருந்தேன்’’ எனறும் சொல்லியிருந்தார். ‘‘சிவபாபா, தாய்மார்களுக்கு ஞான கலசம் கொடுப்பதற்காக வந்திருக்கிறார். ஆனால் அவர் என் வாய்மூலம் பேசுகிறார். அதாவது எனது காதும் அருகில் இருக்கும் காரணத்தால் நானும் கேட்டுக்கொள்கிறேன். அதாவது இந்த தாய்மார்களின் காரணமாக எனக்கும் நன்மை ஏற்படுகிறது’’ என்று சொன்னார். சிலநேரம், மாதேஸ்வரி என்னைவிட முன்னால் இருக்கிறார் ஏனெனில் அவர் பாலபிரம்மச்சாரினியாக இருக்கிறார் ஆனால் நானோ படியில் இறங்கிவிட்டவன் என்றார். இவ்விதமாக எப்போதுமே பிறரை தன்னைவிட முன்னால் வைத்துக்கொண்டே இருந்தார். அதேவேளை தன்னை மறைத்து வைத்துக் கொண்டார். இந்தக் கலையை உபயோகப்படுத்தி அவர் பிறரை முன்னேற்ற மட்டும் வைக்கவில்லை. மாறாக அவர்களிடம் உல்லாசத்தை உருவாக்கி அவர்களிடமும் பணிவாக இருக்கும்படியாக அதாவது பெருமையை ஏற்காமல் தன்னை மறைத்து வைத்துக்கொள்ளக்கூடிய பாடத்தை கற்பித்துக் கொண்டே இருந்தார். ‘‘மறைமுக தானத்தால் மகா புண்ணியம் உண்டாகும். மறைமுக சேவையால் அதிக பலன் கிடைக்கும் மேலும் மறைமுக முயற்சியாளரே முன்னேற்றம் அடைகிறார்’’ என அவர் எப்போதும் சொல்லிக்கொண்டே இருந்தார். ‘‘சிவபாபா மறைமுகமாக இருக்கிறார், எனது முயற்சியும் மறைமுகமானதே, அதனால் நானும் மறைமுகமாகவே இருக்க வேண்டும் அதாவது என்னை நான் வெளிப்படுத்திக் கொள்ளக் கூடாது. சிவபாபாவின் பெயரைத்தான் மக்கள் முன் கொண்டுவரவேண்டும்’’ என்று சொல்லி வந்தார். எல்லோரிடமும் ‘‘சிவபகவான் வாக்கு’’ என்றே சொல்லி வந்தார். அதாவது சிவபாபா இன்ன சொன்னார் இப்படிச் சொன்னார் என்று சொல்லி வந்ததோடு, தம்மை சேவகன் அல்லது மாணவனாக இருப்பதாகச் சொல்லி வந்தார். இவ்விதமாக தன்னை மறைத்து வைத்து சிவதந்தையை வெளிப்படுத்துவது என்பது, உண்மையில் தன்னையும் வெளிப்படுத்துவதாக உள்ளது. ஏனெனில் குழந்தை எப்போது குணவானாகி தந்தையிடம் தனது குணங்கள் அனைத்தையும் அர்ப்பணம் செய்து அவரை

வெளிப்படுத்துகிறதோ அப்போது தந்தை அந்த குழந்தையின் அடக்கத்தைப் பார்த்து அதைப் புகழ்ந்து வெளிப்படுத்துகிறார்(Son shows father and father shows son).

புகழின் மேல் ஆசை வைப்பதால் அதாவது பிறர் தம்மை புகழ்ந்து பேசுவதை ஏற்றுக் கொள்வதால் புண்ணியம் கரைந்து போய் விடுகிறது மேலும் யோக வடிவ வருமானத்திலும் நஷ்டம் ஏற்பட்டு விடுகிறது என்பதையும் பாபா சொல்லி இருக்கிறார். யார் யோகப் பயிற்சி செய்கிறார்களோ அவர்கள் செய்ய வேண்டியது என்னவென்றால் அவர்கள் தன ் புகழை தானும் பாடக்கூடாது மேலும் பிறர் மூலமாக பாடப்படும் தனது புகழையும் ஏற்கக்கூடாது அதாவது மற்ற பலர் அவருக்கு புகழ்பாடினாலும் அவர் அதைக் கேட்டு அதன் அபிமானியாகி விடக்கூடாது. குஷியில் ஆட்டம் போடக்கூடாது மேலும் அந்தப் புகழை எல்லாம் தனக்காக ஏற்காமல் அவைகளை "இவையெல்லாம் சிவபாபாவின் அற்புதங்கள், அதாவது திறமைகளைத் தந்து அவைகளைச் செய்ய வைத்தவர் அவரே" எனச் சொல்லிவர வேண்டும்.

ஆகவே, செயல் செய்து கொண்டிருந்த போதும், தன்னுடைய வாழ்வில் மிக அதிகமான குணங்களை நிறைத்துக் கொண்டிருந்த போதும், தன்னை மறைத்து வைத்திருக்க வேண்டும், இதுவும் ஒரு கலையாகவே இருக்கிறது. இந்தக் கலையறியா மனிதர்கள் காரியம் செய்த பிறகு அவர்களுடைய குணத்தைப் பாடவில்லை என்றால், அவர்களைப் பெருமை படுத்தவில்லை என்றால், அவர்களை அங்கீகரிக்கவில்லை என்றால் அவர்கள் மனம் அதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் தவிக்கிறது. மேலும் அப்படிப்பட்டவர்கள் நியாயமான அதாவது அறிவுபூர்வமான வகையில் தன்னை மறைத்து வைத்துக் கொள்ள அறியாதவர்களாக இருக்கிறார்கள். இந்தக் கலை குறைவாக இருப்பதன் விளைவு என்னவென்றால் அவர்கள் செய்த நற்காரியத்தின் உடனடி பலனை, புகழின் வடிவில் அனுபவித்து உடனே தீர்த்து விடுகிறார்கள் மேலும் அந்த பெருமையை ஏற்று அந்த அபிமானத்தின் வியாதியால் தனது வாயை புண்ணாக்கிக் கொள்கிறார்கள் அதாவது அவர்கள் சுபாவமே அப்படி மாறி விடுகிறது. அதனால் அவர்கள் எங்கு சென்றாலும், அங்கு உள்ள மனிதர்கள் அவரை பெருமைப்படுத்த வேண்டும் என்ற ஆசை அவர்களுக்கு எழுகிறது. என்னையும் அறிவாளியாக, நற்செயல் செய்பவராக ஏற்றுக் கொள்ள வேண்டும். என்னை மதிக்க வேண்டும், எனக்கு விருந்தோம்பல் செய்ய வேண்டும் அல்லது எனது ஆலோசனையைக் கேட்க வேண்டும் என்றெல்லாம் நினைக்க ஆரம்பித்து விடுகிறார்கள். இவ்விதமாக அவர்கள் பணிவு என்ற விலைமதிப்பற்ற ரத்தினங்களை இழந்து பரம ஏழையாகி விடுகிறார்கள். மனிதர்கள் மூலமாகக் கிடைக்கும் மரியாதை என்ற (எலும்புத்) துண்டுகளுக்காக எப்போதும் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள் பின்னர் அந்த மனவிருப்பம் நிறைவேறவில்லை என்றால் பிறரிடம் கோபம், அதிருப்தி அல்லது விரோதம் கொண்டு துக்கப்படுகிறார்கள். இதிலிருந்து வாழ்வை பணிவு, சினேகம், உதவி முதலிய தெய்வீக குணங்களினால் நிறைந்திருக்கச் செய்வதற்கு அல்லது ஆன்மீக ரீதியில் சதா மகிழ்ச்சியாக, தனது போதையில் மகிழ்ந்து இருப்பதற்கு தன்னை மறைத்து வைப்பதும் ஒரு மிகப்பெரிய மற்றும் உபயோகமான கலையாக இருக்கிறது என்பது தெளிவு.

## வெளிப்படுத்துதல்

தன்னை மறைத்து வைப்பது என்பது ஒரு பெரிய கலையாக இருப்பது போலவே தன்னை வெளிப்படுத்துவதும் ஒரு கலையாகும். பப்ளிசிட்டி (publicity) கூட ஒரு கலையாகும். பலர் தன்னையோ அல்லது பிறரையோ வெளிப்படுத்துவது எப்படி என்பதை அறிந்திருக்கிறார்கள். ஆனால் அதன்கூடவே அவர்கள் தம்மை மறைத்து வைக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையை தெய்வீகத் தன்மையின் பார்வையில் ஒரு கலை என்று சொல்ல முடியாது. கலை என்றால் இரண்டு நிலைகளும் ஒரே நேரத்தில் நிரூபணமாக வேண்டும். நாம் மறைந்தும் இருக்க வேண்டும், வெளிப்பட்டும் இருக்க வேண்டும். இது எப்படி சாத்தியமாகும்? இந்த இரண்டு வேலையையும் ஒன்றாக செய்ய ஆசைப்படுவது என்பது கூழையும் குடிக்க வேண்டும் அதே வேளை அது மீசையிலும் ஒட்டக்கூடாது என ஆசைப்படுவதற்கு ஒப்பாகும் என சிலர் சொல்லலாம். எனினும்

உண்மையான விசயம் அப்படி இல்லை. கழைக்கூத்தாடி ஒருவர் கயிற்றின் மீது ஏறி சாகசங்களையும் செய்கிறார் அதே வேளை அந்தக் கயிற்றில் இருந்து கீழே விழுந்து விடாமல் இருக்க சமநிலையையும் காக்கிறார். அதே போல இந்த இரண்டு செயல்களையும் ஒருசேர செய்யமுடியும், எப்படி?

உண்மையில் தான் பணிவாக இருப்பது மற்றும் தன்னை மறைத்து வைப்பதே தன்னை வெளிப்படுத்தாமல் வெளிப்படுத்துவதாகும். பரமாத்மாவின் புகழைப் பாடுவதும் பிறரை பாட வைப்பதும்தான் யோகப் பயிற்சி செய்பவர் அல்லது ஞானவான் மனிதனின் இலட்சியமாக இருக்கிறது. இந்த உத்தேசத்தில், நான் முதலில் பாவ அழுக்குகள் நிறைந்து இருந்தேன். விகாரங்களின் குழியில் விழுந்து கிடந்தேன், துன்ப கடலில் உழன்றேன், இருள் நிறைந்த குகைக்குள் இருந்தேன், அப்படிப்பட்ட என்மேல் இறைவன் கருணை காட்டினார், என்னை இன்று …… ஆக்கியிருக்கிறார் என உள்ளத்தின் ஆழத்தில் இருந்து அவர் தனது அனுபவத்தை சொல்லி வருகிறார். இவ்விதமாக இறைவனை வெளிப்படுத்துவதன் மூலம் அவர்தம் வெளிப்பாடும் கூடவே ஏற்பட்டுக்கொண்டே இருக்கிறது. ஏனெனில் இப்போது அவருடைய வாழ்க்கை எப்படி உயர்வு அடைந்திருக்கிறது என்பது அந்த பேச்சிலேயே தெரிந்து விடுகிறது. எனினும் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற நோக்கம் அவரிடம் இருப்பதில்லை. மறைமுகமாக நடந்து கொண்டிருக்கும் இறைவனின் சர்வோத்தம, உலகமங்கள செயல்களை உலகத்தாரின் கவனத்திற்கு கொண்டுவந்து அவர்களை இறைவனுக்கு புறம்பான சிந்தனையில் இருந்து மாற்றி இறைவன்மீது அன்பு கொள்ளும்படியாக செய்வதே அவருடைய இலட்சியமாக இருக்கிறது. எனினும் அப்படிச் செய்வதற்காக அவர் தனது மனம்-சொல்-செயலில் உண்மையாகவும், புனிதமாகவும், எப்போதும் இறைவன் பணியில் இருப்பதோடு இனிய சொல் உடையவராகவும் நடந்துகொள்கிறார். அப்போதே அவர் இறைவனை வெளிப்படுத்த முடியும். இதிலிருந்து இதுவும் ஒரு பெரிய கலை என்பது தெரிய வருகிறது.

### இந்தக் கலையை கொண்டுவருவதற்கு தேவையான குணங்கள் யாவை?

மேலே குறிப்பிட்ட விசயங்களில் இருந்து இந்தக் கலையில் நிபுணத்துவம் பெறுவதற்கு முக்கியமாக பல குணங்கள் தேவை என்பதை அறியலாம் அவைகள் (1) பிறரோடு நல்லுறவை பேணுவது (good public relations) (2) யாரை வெளிப்படுத்த வேண்டுமோ அவருடைய அதாவது பரமாத்மாவை இதயத்தின் ஆழத்தில் இருந்து அனுபவத்தோடு புகழ்பாடுவது (3) உடல், மனம், பொருள் மற்றும் சாதனங்கள் அனைத்தையும் முழு ஈடுபாட்டோடும் மகிழ்ச்சியாகவும் இந்த முயற்சியில் ஈடுபடுத்துவது (4) தற்போதைய பொது ஜன விளம்பர சாதனங்களை ஆன்மீக வழியிலும் தெய்வீக வகையிலும் பயன்படுத்துவது (5) தனது சுபாவத்தில் பணிவும், உண்மையும் இருக்கும்படி பார்த்துக்கொள்வது (6) தீய மற்றும் தூய்மையற்ற சாதனங்களைத் தியாகம் செய்வது (7) இறைவன் மீது மாறாத நம்பிக்கை கொண்டு ஒரே பலம் ஒரே நம்பிக்கை என்பதில் உறுதியாக இருப்பது.

நாம் இந்த தெய்வீக குணங்களை நமது வாழ்வில் கடைப்பிடித்து அதை உபயோகப் படுத்தும்போது நாம் இந்தக் கலையில் நிபுணத்துவம் பெற்றிருப்போம் மேலும் ஈஸ்வரிய சேவையின் காரியத்திலும், மனிதர்களுக்கு ஈஸ்வரிய ஞானத்தின் அறிமுகத்தைக் கொடுப்பதிலும் வெற்றி வாய்ப்பு உறுதியாகி விடும்.

## 12. தலைமை தாங்கும் கலை

## (The art of leadership)

இந்த உலகில் பெரும்பாலான மனிதர்கள் மற்றவர்களைப் பின்பற்றி நடப்பவர்களாக இருக்கிறார்கள். எப்படி செம்மறியாடுகள் முன்னால் இருக்கும் ஆட்டைப் பார்த்து அந்த ஆடு எங்கே போகிறதோ அங்கேயே அவைகளும் போகிறது. அவைகளைப் போலவே பெரும்பாலான மனிதர்களின் நிலையும் இருக்கிறது. அந்தப் பாதை அந்த செம்மறியாடுகளை வீட்டின் பக்கமாக அழைத்துச் செல்லலாம் அல்லது மேய்ச்சல் நிலத்தின் பக்கமாக அழைத்துச் செல்லலாம் அல்லது பாலைவனத்தின் பக்கம்கூட அழைத்துப் போகலாம். ஆனால் அவைகள் அதைப் பற்றி யோசிப்பதே இல்லை. அதேபோல நிறைய பேர் புதிய பாதையில் போக நினைப்பதில்லை, அவர்கள் ஏற்கனவே இருக்கும் பாதையிலேயே நடக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள். எந்த சமூக பழக்க-வழக்கங்கள் இருக்கின்றனவோ, அவைகளை அவர்கள் ஒருபோதும் மறுபரிசீலனை செய்வதில்லை. அவர்கள் மற்றவர்களின் புத்தி பலத்தின்படியே நடப்பவர்களாக இருக்கிறார்கள். வெகு சில மனிதர்களே புதியதை உருவாக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள். பொருட்களை மிக எளிதில் உருவாக்கி, அவைகளில் புதுமையைக் கொண்டுவந்து, அதன் உபயோகத்தை அதிகப்படுத்தி, அதன் அழகை மிளிரச்செய்து குறைந்த செலவிலும் சிறந்த தரத்தை தருவதற்கான யோக்கியதையும் கலையும் வெகு சிலரிடமே அமைந்திருக்கக் காண்கிறோம்.

நல்ல தலைவர்கள் இல்லாத காரணத்தால், நிறைய நிறுவனங்கள், நிறைய சமூகங்கள், நிறைய தேசங்கள் நாளுக்குநாள் தரங்குறைந்தும் வீழ்ச்சியை நோக்கியும் சென்று கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். அவர்களுக்கு நல்ல வழியைக் காட்டுபவர்கள் யாரும் கிடைப்பதில்லை. வளர்ச்சி அடையச் செய்வதற்கு யாரும் இருப்பதில்லை. மிகப்பெரிய சேனைகள் கூட வழிநடத்தும் தளபதிகள் திறமைசாலிகளாக இல்லாத பட்சத்தில் யுத்தத்தில் தோற்றுவிடுகின்றன. அவ்வப்போது ஆலோசனை தந்து எல்லோரையும் ஒற்றுமையாக வைத்திருக்கத் தகுந்த பெரியவர்கள் இல்லாதபோது குடும்பத்தில் கூட பிளவு ஏற்பட்டு விடுகிறது. அதாவது தலைமை தாங்கும் கலையென்பது அப்படிப்பட்ட கலையாக இருக்கிறது. அதன்மூலம் இலட்சக்கணக்கான கோடிக்கணக்கான மனிதர்களுக்கு அதாவது தேசங்கள் மற்றும் சமூகங்களுக்கு நன்மை ஏற்படுகிறது.

எனினும், யாரால் புதிய ஆலோசனைகளை வழங்க முடியுமோ, புதிய திட்டங்களை வகுக்க முடியுமோ, புதிய பாதை காட்ட முடியுமோ, உள்ளம் செத்துவிட்ட மனிதனிடத்திலும் அறிவை தோற்றுவிக்க முடியுமோ, பிரிந்து கிடக்கும் மனிதர்களை ஒன்று சேர்க்க முடியுமோ மேலும் அந்த ஒன்று சேர்ந்த கூட்டத்தை நாளுக்கு நாள் வளர்த்துக் கொண்டே போக முடியுமோ அவர்களாலேயே தலைமை வகிக்க முடியும்.

யார் மனிதர்களைப் பற்றி அறிந்திருக்கிறார்களோ, யாரால் என்ன செய்ய முடியும், என்ன செய்ய முடியாது, யார் நேர்மையானவர், யார் ஏமாற்ற வாய்ப்பிருக்கிறது, யாரை நம்பி காரியத்தை ஒப்படைக்க முடியும், யாரை நம்பினால் ஆபத்தாக முடியும் என்றெல்லாம் நன்றாக அறிந்திருக்கிறார்களோ, அவர்களே சிறந்த முறையில் தலைமை தாங்க முடியும். யாரை எந்த வேலைக்கும் உதவாதவர் என்று பொது ஜனங்கள் சொல்கிறார்களோ, அவரையும் ஒரு பொறுப்புள்ள மனிதராக நல்ல தலைவரால் உருவாக்க முடியும். அவர் அனைவரிடமும் ஊக்க உற்சாகத்தைக் கொண்டுவருகிறார். ஒரு புதிய உத்வேகத்தை, புதிய துடிப்பை கொண்டு வருகிறார். அவர் ஒருபோதும் நம்பிக்கை இழப்பதில்லை, அவரிடம் உற்சாகம் எப்போதும் நிறைவாக இருக்கும். அவரது மனோசக்தி இரும்பைக் காட்டிலும் வலிமையாக இருக்கும். அவர்கள் பீரங்கிகளைக் கண்டும் அஞ்சுவதில்லை, மலைகளைக் கண்டும் பயப்படுவதில்லை, நதியைக் கண்டும் நிற்பதில்லை, மலைகள் சரிவதைக் கண்டும் சோர்ந்து உட்கார்ந்து விடுவதில்லை அதாவது எடுத்த இலட்சியத்தில் உறுதியாக இருப்பார்கள். அந்த இலக்கை அடைவதற்குத் தேவையான சாதனங்களைத் தம்மோடு வைத்திருப்பார்கள். சாதனங்கள் தாமாகவே ஈர்க்கப்பட்டு அவரிடம் வந்து சேருகிறது. எனினும் அவர்கள் தங்கள் காரியத்தில் கண்ணும், கருத்துமாக இருப்பார்கள். அவர்கள் வெறுங்கையுடன் இருந்தாலும், யாரும் அவருக்கு துணையாக இல்லாவிட்டாலும், அவர்கள் கொள்கை என்ற கொடியை கையில் ஏந்தி நடக்க ஆரம்பித்து விடுவார்கள் பின்னர் மெல்ல மெல்ல கூட்டம் சேர்ந்து எழுச்சி பெறுவார்கள். பிறகு மக்கள் அவர்கள் பின்னே நடக்க

ஆரம்பித்து விடுவார்கள். பின்னர் அவர்கள் எழுப்பும் கரகோஷம் விண்ணையும் அதிரச் செய்யும் வண்ணம் எல்லோரது கவனத்தையும் கவரும். பலவீனத்திலும் பலவீனமானவர்கள், கோழையிலும் கோழையானவர்கள் கூட அவர்கள் உருவாக்கிய அமைப்பில் சேர்ந்து சக்தியை அனுபவம் செய்து இன்னும் அதிகமாகச் முயற்சி செய்து முன்னேற நினைப்பார்கள். இன்னும் என்ன, தனது இடுப்பில் துணியைக் கட்டிக்கொண்டும் தலையில் முண்டாசு கட்டிக்கொண்டும் ஞான ஆட்டத்தில் இறங்கவும் தயாராகி விடுவார்கள்.

எனினும், யாரிடம் உறுதியான ஈடுபாடு மட்டும் இல்லாமல், உண்மையான மனமும் இருக்கிறதோ, திறமை இருந்தபோதும் அவநம்பிக்கை இல்லாமல் இருக்கிறதோ அவரே இப்படிப்பட்ட தலைமையை ஏற்க முடியும். அவருடைய நம்பிக்கையே அவருக்கு மிகப்பெரிய பலமாக இருக்கிறது. உயர்ந்த பண்புகள், சிறந்த சிந்தனைகள், தன்னலமில்லா மனம், எளிய வாழ்வு, எல்லோருக்கும் நன்மை விளைய வேண்டும் என்ற உறுதியான எண்ணம், எல்லோரையும் தன்னுடையவராக்கி அரவணைத்துப் போகும் பண்பு, எல்லோரிடமும் அன்பாகவும், இனிமையாகவும் நடந்து கொள்வது, ஒழுக்கம் மற்றும் நிர்வாகத் திறமை ஆகியவை மனிதனை ஒரு நல்ல தலைவனாக உருவாக்குகிறது.

நல்ல தலைவருக்கு நேரத்தைப் பற்றிய அறிவும் இருக்கும். எந்தச் சந்தர்ப்பத்தில் என்ன சொல்ல வேண்டும் அல்லது செய்ய வேண்டும். மேலும் எவ்விதமாக சைகை காட்ட வேண்டும் என்ற விசயங்களைக் குறித்த சகஜமான அறிவு அவரிடம் இருக்கும். அவர் நல்ல சந்தர்ப்பத்தை ஒரு போதும் கைநழுவிப் போக விடமாட்டார். ஒருகால் தவறு ஏதாவது ஏற்பட்டு விட்டாலும் அதற்காக அவர் மன்னிப்பு கேட்கவோ அல்லது பிராயசித்தம் செய்யவோ அறிந்தவராக இருப்பார். மனிதர்கள் அவரை புகழ்ந்தாலும், இகழ்ந்தாலும் நிலை தடுமாறாமல் ஒரேமாதிரி இருப்பார். அவர் எப்போதும் எச்சரிக்கையுடன் நடந்து கொள்வார் மேலும் மக்களை ஒற்றுமையுடன் வாழ வைப்பதற்கான திறமையும் அவரிடம் இருக்கக் காணலாம். ஒருவர் செய்த நல்ல செயலை பாராட்டுவார் மேலும் எந்த செயலை யார் செய்தாலும், அதற்குரிய பங்கை அவர் அவருக்கே கொடுப்பார். உறுதியான உள்ளம் இருந்தபோதும் பணிவாக இருப்பார் மேலும் பணிவாக இருந்தாலும் கூட அவர் தனது சுயமரியாதையை விட்டுவிடாமல் இருப்பார்.

இப்படியாக ஞானி மற்றும் யோகியாக இருப்பதோடு கூடவே ‘தலைமை தாங்கும் கலை’ யையும் பழகிக் கொள்வது மிகவும் அவசியமாகும். ஏனெனில் அதன்மூலம் நாம் மக்கள் சக்தியை ஒன்று திரட்டி மிகப் பெரிய காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிக்க முடியும். இதன்மூலம் நாம் நமது வாழ்வின் நேரம் மற்றம் சக்தியின் பலமடங்கு இலாபத்தை மக்களுக்கு வழங்க முடியும் அத்துடன் தன்னிடம் பல நற்குணங்களை வளர்த்துக் கொள்ளவும் முடியும்.

ஆனால் எப்போது நமது புத்தியின் யோகம் ஈஸ்வரிய சக்தியோடு இணைந்து இருக்கிறதோ அப்போதே இந்தக் கலை நமது வாழ்வில் ஏற்றமும் வளர்ச்சியும் பெறும். ஒருவேளை பரமாத்மாவோடு யோகம் இல்லை என்றால் அடிக்கடி தவறுகள் ஏற்பட வாய்ப்பு உண்டு. மேலும் வாழ்க்கையில் பல பிரச்சினைகள் வரும்போது விரக்தியடையவும் வாய்ப்புண்டு மற்றும் பாதையில் இருந்து விலகி தவறான பாதையில் போவதற்கான அபாயமும் உண்டு. பரமாத்மா நமக்கு நல்வழி காட்டக் கூடியவராக இருக்கும்போது, அவரிடமிருந்து நமக்கு ஈஸ்வரிய சக்தியின் லாபம் கிடைத்துக்கொண்டே இருக்கும். அப்போது நாமும் சுயம் ஒழுக்க சீலர்களாக நடந்து கொள்வோம் மேலும் மற்றவர்களையும் திறமையோடு வழிநடத்துவோம். அதற்கு பவித்திரத்தை மிகவும் சக்தி வாய்ந்ததாக்க வேண்டும் அதுமட்டுமல்லாமல் மற்ற தகுதிவாய்ந்த சக்திகள் மூலமாக தன்னை சீர் செய்து கொள்ளவும் வேண்டும். மேலும் உயர்ந்த இலட்சியத்தை முன்வைப்பதோடு யோகத்துடனும் இருந்து தன்னை மேம்படுத்திக்கொண்டே பிறரையும் முன்னேற்றுவதற்கு உத்வேகம் தரவேண்டும்.

# 13. பராமரிக்கும் அல்லது வளர்க்கும் கலை

## (The art of sustenance)

எந்த மனிதர் விவசாயம் செய்வதற்கான கலை வாய்க்கப் பெற்றவராக இருக்கிறாரோ, அவர் விதை விதைத்தவுடன் வயலுக்கு நீர்பாய்ச்ச வேண்டும் என்றும் பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக பூக்கள்-பழங்கள் தோன்ற ஆரம்பித்தவுடன் அவைகளை பறவைகளிடமிருந்து காப்பாற்ற வேண்டும் என்றும் அவசியம் அறிந்திருப்பார். இப்படி பல செயல்கள் பல விதங்களில் செய்ய வேண்டியதாக இருக்கிறது. அப்போதுதான் உற்பத்தியில் தடையேதும் இல்லாமல் பயிரை முழுமையாக விளைய வைக்க முடியும். கொஞ்ச காலத்திற்குப் பிறகு மண்வெட்டி முதலிய சாதனங்களால் நிலத்தை கொத்தி மிருதுவாக்குவதும் அவசியமாகிறது. அப்போது தான் செடிக்கு காற்றும் ஈரமும் கிடைத்துக் கொண்டே இருக்கும். அதேபோல, எப்போது நாம் யாருடைய மனதிலாவது ஞான வடிவ விதை ஊன்றுகிறோமோ அதாவது அவருடைய புத்தியில் நம்பிக்கையின் நாற்று நடுகிறோமோ அப்போது அந்த ஞானம் மற்றும் நம்பிக்கையை பலவிதமான ஆபத்துக்களில் இருந்து பாதுகாக்க வேண்டியதாக இருக்கிறது. இல்லையெனில் அப்படிப் பல காரணங்கள் வந்து விடுகிறது அதனால் நம்பிக்கையின் வேர்கள் அவரிடம் பலமிழந்து விடுகின்றன பின்னர் அதில் ஞானத்தின் விதை பலன் கொடுப்பதில் இருந்து வஞ்சிக்கப்பட்டு விடுகிறது.

அதைப்போலவே, தாய்-தந்தையர் பிள்ளைகளை பெற்றெடுத்த பின்னர் அவர்கள் பலவீனமாக இருக்கக் கூடாது என்பதற்காக அவர்களை நல்லபடியாக ஊட்டி வளர்க்கிறார்கள், அதனால்தான் அவர்களுடைய உடல் ஆரோக்கியமாகவும், உள்ளம் திருப்தியாகவும் இருந்து வருகிறது. இவ்விதத்தில், ஈஸ்வரிய ஞானத்தின் மூலம் மனிதர்களுக்கு புது (ஆன்மீகப்) பிறவி கொடுத்த பிறகு அவர்களுக்கு சினேகம், நட்பு, இரக்கம், உதவி ஆகியவைகளை காட்டுவது அவசியமாகிறது. அப்போதுதான் அவர் பரிபக்குவநிலையை பெறமுடியும். இல்லையென்றால் மனித வாழ்வில் அப்படிப்பட்ட நிகழ்வுகள் பல ஏற்படுகின்றன அதனால் அவருடைய நம்பிக்கை பலமிழந்து விடுகிறது. அவருடைய நிச்சயம் அசைந்து விடுகிறது, அவருடைய யோக யாத்திரையில் தடைகள் தோன்ற ஆரம்பித்து விடுகிறது. பின்னர் அவர் மனிதரிடமிருந்து என்ன இறைவனிடமே கோபம் கொள்கிறார் பின்னர் முயற்சியை விட்டுவிட்டு மாயாவின் சீடனாகி விடுகிறார். இவ்வுலக வாழ்க்கையில் பயணித்துக் கொண்டிருக்கும் போதே ஒருவருடைய கணவர் இறந்து போகலாம். ஒருவருடைய பிள்ளையை அகால மரணம் தழுவிக்கொள்ளலாம் அதாவது அவரது முன்னே மற்ற ஏதாவது ரூபத்தில் கஷ்டங்கள் பிரச்சினைகள் எழலாம். அப்படிப்பட்ட சூழ்நிலையில், ஆத்மாவிற்கு கணவர் பரமேஸ்வரன் என்பதும் அவர் எப்போதும் அழியாமல் என்றென்றும் வாழ்பவர் என்பதும், அனுசூயாவாகி பரமாத்மாவையே தனது பிள்ளையாக்கிக் கொள்ள முடியும் என்பதும் ஸ்ரீகிருஷ்ணரையும் தெய்வீகக் காட்சி அல்லது தெய்வீக புத்தியின் மூலமாக தனது மடியில் கிடத்திவிட முடியும் என்றும் ஆன்மீக ஞானத்தின் மூலம் உண்மையை அறிந்து கொண்டார்கள் என்றால் வேதனையான சூழ்நிலையில் இருந்து ஆறுதல் கிடைத்துவிடும். இவ்விதமாக, ஞான மார்க்கத்தில் சென்று கொண்டிருக்கும் போது எந்த மனிதருக்காவது வாழ்க்கையில் களைப்பு அல்லது சலிப்பு ஏற்பட்டு, முயற்சியை விட்டுவிட்டு வீட்டில் அமர்ந்து விட்டார்கள் என்றால் அவரிடம் மீண்டும் ஊக்க-உற்சாகத்தை கொண்டுவர, அவரை ஞானமுள்ள மற்றும் மனமகிழ்ச்சி தரும் காரியங்களில் கலந்துகொள்ள அதாவது மீண்டும் முயற்சியின் பாதையில் வர வைப்பதற்கான உத்வேகத்தை தரமுடியும். இவைகள் எல்லாம் சூட்சும ரூபத்தில் ஞான, யோக மற்றும் நற்குணங்களின் மூலமாக ஆத்மாக்களை பராமரிக்கும் விதிகளாக உள்ளது.

சில ஞானவான் ஆத்மாக்கள் செயல் செய்வதில் அதிக ஆர்வம் கொள்கிறார்கள். அவர்களுக்கு சேவை செய்வது நன்றாக இருக்கிறது. ஓரிடத்தில் அமர்ந்து சிந்தையை ஒருமுகப்படுத்தும் பயிற்சி செய்வதற்குப் பதிலாக அவர்கள் கடமை உணர்ச்சியோடு உடல்-மனம்-செல்வத்தால் பிறருக்கு நன்மை செய்யும் காரியத்தில் ஈடுபட்டிருக்க அதிகமாக விரும்புகிறார்கள். இப்படிப்பட்டவர்களை சேவை காரியத்தில் ஈடுபட்டிருக்க வைப்பதே அவர்களை பரிபாலனை செய்வதாகும்.

சில மனிதர்களுக்கு புதுப்புது விசயங்களை யோசிப்பது மற்றும் செய்வது பிடித்தமானதாக இருக்கும். புதுமை இல்லாத பட்சத்தில் அந்த வாழ்வு அவர்களுக்கு சுவையற்றதாக அனுபவம் ஆகும். அவர்கள் புதிய திட்டத்தைக் குறித்து சிந்திக்க விரும்புவார்கள். ஏதாவது புதியதை உருவாக்க விரும்புவார்கள். அவர்களுடைய புத்தியை சிந்தனையில் ஈடுபட்டிருக்க வைப்பதே உண்மையில் அந்த ஆத்மாவைப் பொருத்தவரை பாலனை தருவதாகும்.

(1) ஸ்தூலமாகவும், சூட்சுமமாகவும் மனித ஆத்மாக்களை முயற்சியில் முன்னேற்றுவது (2) அவரது சம்பந்தத்தை இறைவனோடு இணைப்பது (3) அவர்களை தெய்வீகக் குடும்பத்தின் நெருக்கத்தில் கொண்டுவருவது (4) நாளுக்கு நாள் அவர்களுடைய வளர்ச்சிக்காக புதிய சாதனங்களையும், நிகழ்ச்சிகளையும் உருவாக்குவது (5) சமயம் மற்றும் சினேகத்தின் மூலமாக அவருடைய மனச்சுமையை குறைப்பது (6) அவர்களுக்கு ஆன்மீகத்தின் அனுபவத்தை ஏற்படுத்துவது (7) அவர்களை பூஜைக்கு உரியவராகும் மாலையில் மணியாகச் செய்வது (8)பரமபிதா பரமாத்மாவிடமிருந்து சொத்துரிமைப் பெறுவதற்கு அதிகாரியாக்குவது (9) அவருடைய குறைகளையும், பலவீனங்களையும் அகற்றுவதற்காக முயற்சி செய்வது (10) தெய்வீக குணங்களால் அவருடைய தாரணையை வலிமை மிக்கதாக்குவது (11) ஆன்மீக சக்திகளைக் கொண்டு அவரை சக்திசாலி ஆக்குவது - இவையெல்லாம் பாலனை செய்வதற்கான விதவிதமான வழிகள். யாருக்கு இந்த கலை வாய்க்கிறதோ அவரே அனேக ஆத்மாக்களின் அகத்திற்கு சுகமளித்து அவரை மாயாவின் துன்பம்-வலியிலிருந்து விடுவித்து அவரது ஆசீர்வாதம் அல்லது வாழ்த்துக்களுக்கு பங்குதாரர் ஆகிறார். அவருக்கே பரமாத்மாவிடம் இருந்து அனேக வரதானங்கள் கிடைக்கின்றன. யார் ஆன்மீக உணர்வுடன் இந்தப் பிறவியில் ஆத்மாக்களுக்கு அப்படிப்பட்ட பாலனை தருகிறாரோ, அவரே எதிர்காலத்தில் பிரஜைகளுக்குப் பிடித்த அல்லது ஜனங்களின் ஜனார்த்தனனாக அல்லது ராஜாக்களுக்கெல்லாம் ராஜாவாக, மனிதனில் இருந்து தேவனாக ஆகிறார்.

நான் அனேகனேகருக்கு சுகத்தையும், அமைதியையும் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் எப்போது ஒருவரது மனதில் தீவிரமாகிறதோ அப்போதே இந்தக் கலை அவரிடம் வளர்ச்சியடையும். கொடுக்கக்கூடிய 'வள்ளல்' மட்டுமே இந்தப் பாலனை தரமுடியும். யாரிடம் பெறவேண்டும் என்ற ஆசை சவாரி செய்கிறதோ அந்த வறியவன் பிறருக்கு உயர்வு தரும் பாலனை எப்படி தரமுடியும்? யாருக்கு பிறர் மீது சினேகமும், இரக்கமும் இருக்கிறதோ அவரே பாலனை தர முடியும். யாருடைய விவகாரம் இரக்கமற்றதாக இருக்கிறதோ, மனம் எப்போதும் அதிருப்தியாகவும் எரிச்சலாகவும் இருக்கிறதோ அவர்கள் எப்படி மற்றவர்களுக்கு பாலனை தர முடியும்? அதாவது இந்தக் கலைக்காக இந்த விசயங்கள் எல்லாம் அவசியமாக இருக்கிறது (1) பிறரது நன்மை விரும்பியாக இருக்க வேண்டும், ஆன்ம உணர்வு இருக்க வேண்டும் மேலும் நட்புணர்ச்சி இருக்க வேண்டும் மேலும் (2) பிறருக்கு கொடுக்க வேண்டும் என்ற உணர்வு இருக்க வேண்டும். யாருடைய கை எப்போதும் ஏற்கக்கூடிய நிலையில் இருக்கிறதோ அவர்களால் பாலனை தர முடியாது. யாருடைய கை எப்போதும் கொடுக்கக்கூடிய நிலையில் இருக்கிறதோ அவர்களால் தான் பாலனை கொடுக்க முடியும். எனினும் இந்தக் கலை அவ்வளவு மகத்தானது அதாவது யார் இதில் நிபுணனாகிறாரோ அவர் தெய்வீக ராஜாக்களுக்கெல்லாம் ராஜா ஆகிறார்.

## 14. கெட்டதை நல்லதாக்கும் / வீணானதை பயனுள்ளதாக்கும் கலை

## (The art of changing waste to best)

பலமுறை சில பொருட்களைப் பார்க்கும் போது இது எதற்குமே உதாவது அதாவது அதை எதற்குமே பயன்படுத்த முடியாது எனத் தோன்றுகிறது. ஆனால் இன்று

குப்பைக்கிடங்கு உருவாக்கப்பட்டுள்ளது. எதை நாம் தேவையற்ற காகிதம், உடைந்த பாட்டில், நசுங்கிய தகரம், கிழிந்த-பழைய துணி என நினைக்கிறோமோ, அதையும் குப்பை வியாபாரி வாங்கிக் கொள்கிறார். அவர் அதை மீண்டும் புதுப்பிப்பதற்காக அதாவது அவைகளை மூலப்பொருட்களாக உபயோகிப்பதற்காக தொழிற்சாலைக்கு அனுப்பி வைக்கிறார். குப்பைக் கிடங்கின் இந்தப் பொருட்களை வாங்கி விற்று அவர்கள் செல்வந்தர் ஆகிவிடுகிறார்கள். இதன் அர்த்தம் என்னவென்றால் பெரும்பாலும் எந்தப் பொருளும் வீணான பொருளல்ல. எந்தப் பொருளை நமக்கு உபயோகிக்கத் தெரியவில்லையோ அதை நாம் பயனற்றது என்று சொல்லிவிடுகிறோம். ஒரு காலத்தில் இப்படிப்பட்ட பல பொருட்களை நாம் தூக்கி எறிந்து வந்தோம் ஆனால் இன்று வீணான காகிதத் துண்டுகளை, தைத்ததற்குப் பிறகு ஒதுங்கும் வெட்டுத் துணிகளை, கிழிந்த பழைய ஆடைகளை, பொருட்களை தயாரிக்கும்போது உருவாகும் இரும்புக் கழிவுகளை (scrap), சொல்லப்போனால் எரிந்து மீதமான தீக்குச்சிகளைக் கூட ஏதோ வடிவில் உபயோகப்படுத்தும் பொருட்களாக்க முடிகிறது.

ஒரு சமயத்தில் தொழிற்சாலைகளில் என்னென்ன பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டதோ, அவைகளை தயாரித்தபின் எந்தெந்தப் பொருட்கள் மீதமாகியதோ, அவைகளை பயனற்றவை எனக்கருதி அவைகளை அகற்றுவதற்கு முயற்சி செய்யப்பட்டது. ஆனால் இன்று அவைகளை உபயோகிப்பதற்கான வழிமுறைகள் உருவாகியுள்ளன மேலும் அவைகள் துணை-பொருளாக (by-product) அங்கீகரிக்கப்பட்டு அவைகள் கொள்முதல் செய்யப்படுகின்றன மேலும் அவைகள் உபயோகத்தில் கொண்டு வரப்படுகின்றன.

அதேபோல, முயலும் வாழ்வில் அப்படிப்பட்ட நிகழ்வுகள் பல நடக்கிறது அதில் நமக்கு நஷ்டம் ஏற்பட்டு விட்டது போன்ற உணர்வு ஏற்படுகிறது. எனினும் அந்த நஷ்டத்தைக கூட பலமடங்கு லாபமாக மாற்றுவதற்கான விதி அல்லது உத்திகூட ஒருவிதமான கலையாக இருக்கிறது. ஒருவருக்கு தனது வியாபாரத்தில் அதிகமான நஷ்டம் ஏற்பட்டுவிட்டது அதன் காரணத்தால் அவருடைய தொழில் படுத்துவிட்டது அதாவது அவரது வருமானம் நின்றுவிட்டது என்று வைத்துக்கொள்வோம். அப்போது அந்தக் காரணத்தால் அவருடைய மகிழ்ச்சி மறைந்து போய்விடுகிறது. ஊக்க – உற்சாகம் நலிந்துபோய் விடுகிறது. மேலும் அவரது பாக்கியம் அவ்வளவுதான் எனத் தோன்றுவதற்கு வாய்ப்பிருக்கிறது. வியாபாரம் மந்தமாகி விட்டாலோ அல்லது படுத்து விட்டாலோ அந்த நேரத்தில் அவரது முயற்சியில் தொய்வு ஏற்பட்டு விடுகிறது. எனினும் யாரிடம் நஷ்டத்தை லாபமாக்கும் கலை வந்து இருக்கிறதோ அவர்கள் சுயம் பகவான் மேல் இடைவிடாத நம்பிக்கை வைத்து, இப்போது அந்த அழியக்கூடிய சம்பாத்தியத்திற்குப் பதிலாக அழியாத வருமானம் சம்பாதிப்பதற்கான நல்ல தருணம் கிடைத்திருக்கிறது என எண்ணுவார்கள். அவர்கள் அதிக யோகப்பயிற்சி செய்து விலைமதிக்க முடியாத ஆன்மீக அனுபவங்களில் அளவிடமுடியாத செல்வந்தர் ஆகிவிடுவார்கள். எப்படி இருந்தாலும் அழியக்கூடிய செல்வம் வருங்காலத்தில் மண்ணோடு மண்ணாகக்கூடியதே, அதனால் அழியாத செல்வம் சம்பாதிப்பது அவசியமாகும் என அவர்கள் யோசிப்பார்கள். அப்படி சிந்திப்பதால் அவருடைய மகிழ்ச்சி என்ற பொக்கிஷம் பெருகும் மேலும் நாளுக்கு நாள் உதாசீனமாக இருப்பதற்குப் பதிலாக தனது முன்னேற்றத்திற்காக உற்சாகத்துடன் முயற்சி செய்வார்.

இதேமாதிரி, யாருக்காவது உடலில் ஏதாவது சிறிய அல்லது பெரிய வியாதி வந்துவிட்டதாக வைத்துக் கொள்வோம். இப்போது நான் விலைமதிப்பற்ற ஆரோக்கியத்தை இழந்து உட்கார்ந்திருக்கிறேன். எந்தக் காரியத்தையும் செய்யும் யோக்கிதையற்றவனாக இருக்கிறேன் மேலும் மருந்து மாத்திரை முதலியவற்றிற்காக ஏற்கனவே சம்பாதித்த பணத்தையும் செலவு செய்ய வேண்டியதாக இருக்கிறது என அவர் எண்ணிப்பார்க்க வாய்ப்பிருக்கிறது. ஆனால் யார் இந்தக் கலையை அறிந்தவராக இருக்கிறாரோ, அவர் வீணானவைகளை எண்ணாமல் எல்லாவற்றையும் சக்திமிக்கதாக்கும் எண்ணம் கொள்வார். இப்போது எனக்கு அப்படிப்பட்ட வாய்ப்பு கிடைத்திருக்கிறது அதனால் நான் அதிக நேரம் பரமாத்மாவின் நினைவில் நிலைத்திருக்க முடியும். ஞானத்தின் ஆழத்தில் சென்று பார்க்கமுடியும். மேலும் சேவையின் வேகத்தை அதிகரிப்பதற்கு ஏதாவது நல்ல திட்டங்களை தீட்ட முடியும் என்றெல்லாம் யோசனை செய்வார். யாரெல்லாம் அவரை சந்திக்கச்

செல்கிறார்களோ, அவர்களுக்கு அவர் தனது மனோநிலை மற்றும் வார்த்தைகளால் ஆன்மீக ஆரோக்கியத்தை (spiritual health) அதிகமாக்கும் பணி செய்வார்.

அதேபோல, மனிதர்களுக்கு எப்போது அவப்பெயர் ஏற்படுகிறதோ, அப்போது இன்னார் எனது எதிரி, அவர் தனது விரோதத்தை வெளிப்படுத்தவே அப்படிச் செய்துவிட்டார் என நினைப்பார். ஆனால் அதற்குப் பதிலாக "அவமதிப்போர்கூட தனது ரசிகராகும்படி, மனிதர் விரும்பும்படி, இறைவன் விரும்பும்படியான மாற்றத்தை நான் எனக்குள் கொண்டுவருவேன்" என யோசிக்கும்போது அவரை இந்தக் கலையறிந்தவர் எனச் சொல்லலாம்.

உண்மையில் இந்தக்கலை அப்படிப்பட்ட கலையாக இருக்கிறது, அது மனிதர்களுக்கு சிக்கலான பிரச்சனைகள் வரும்போது மட்டுமல்லாமல் தினசரி வாழ்விலும் பயன்படக் கூடியதாக இருக்கிறது. ஒவ்வொரு நாளும் மனிதனது வாழ்வில் அப்படிப்பட்ட தருணங்கள் வருகிறது அப்போது ஏதாவது வகையில் பாதிப்பு ஏற்படுவதாகத் தெரிகிறது. அந்தப் புதுமையான பிரச்சினைகளை மாற்றி வாழ்வில் திருப்பத்தை கொண்டுவர முடியுமானால் அந்தப் பிரச்சினைகளை சுகத்திற்கான சாதனமாக மாற்றமுடியுமானால் அவர் இந்த முயற்சியின் வாழ்க்கையில் மிகவும் முன்னால் போகமுடியும். அதாவது சம்பூரண நிலை அடைவதற்கு இந்தக் கலையில் தேர்ந்து இருப்பது மிகவும் அவசியமாகும்.

ஆனால் இதற்காக, சில பொருட்கள் எதற்குமே பயன்படாமல் போய்விடுகிறது என்ற எண்ணத்தை மாற்ற வேண்டியது அவசியமாக இருக்கிறது. அதற்குப் பதிலாக அவர்கள், பரமாத்மா எப்படி கெட்டதை எல்லாம் சீர்செய்கிறாரோ, அப்படி அவரும் கெட்டதை நல்லதாக்கும் கலையை நடைமுறையில் கொண்டுவருவது அவசியமாகும்.

## 15. நகைச்சுவைக் கலை

## (The art of Comedy and humor)

ஈஸ்வரிய ஞானம் உண்மையில் மிகவும் சுவையானது. அதன்மூலம் ஞானத்தின் ஆழத்திற்குள் போக முடிகிறது. அதில் இருப்பதைப்போன்ற குஷி வேறெதிலும் இருப்பதில்லை. யாருடைய வாழ்க்கை யோகத்துடன் இருக்கிறதோ, அவர் பரமானந்தத்தில் இருப்பார் அவருக்கு உலகீய நகைச் சுவைகள் அவசியம் என்று தோன்றுவதில்லை. யார் தெய்வீக குணங்களின் முத்துக்களை மட்டும் சேகரிக்கிறாரோ, யார் பாலை மட்டும் குடிக்கிறாரோ அதாவது தண்ணீரை பிரித்து விடுகிறாரோ, அப்படிப்பட்ட பேரறிவு பெற்ற மனிதருக்கு உலகீய நகைச்சுவையில் எந்த விசேசமான விருப்பமும் இருப்பதில்லை. யார் சேவையில் எப்போதும் ஈடுபட்டிருக்கிறார்களோ, அவர்களுடைய மனம் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கும். யாருக்கு இப்போது ஆன்மீக போதை அதிகமாகவில்லையோ, அவர்களுக்கு புறச்சூழலை ஆதாரமாகக் கொண்ட சிரிப்பு-வேடிக்கைகள் அவசியமாகத் தோன்றுகிறது.

எனினும் எதுவரை மனிதவாழ்வில் ஞானத்தின் வண்ணம் படியவில்லையோ, யோகத்தின் நறுமணம் நிறையவில்லையோ மற்றும் குணங்களால் மனம் மகிழ்ந்து அதன் ரசனையில் மூழ்கவில்லையோ, அதுவரை அவருக்கு அவ்வப்போது நகைச்சுவை என்பது அவசியமாகத் தோன்றுகிறது.

இந்த நோக்கத்தில் ஒருவர் ஏதாவது பாட்டு கேட்க வேண்டும், ஏதாவது நாடகம் பார்க்க வேண்டும், சிரிக்கும்படியான விசயம் ஏதாவது சொல்லப்பட வேண்டும் என்றும்

அதனால் அவர் ஞானத்தின் தீவிரத் தன்மையில் இருந்து வெளிவந்து கொஞ்சம் இலேசாக உணர வேண்டும் என்றும் நினைக்கிறார். அதாவது சிலரிடம் அப்படிப்பட்ட கலை இருக்கிறது அதனால் அவர் ஞானம் நிறைந்த சிரிக்கும் விசயம் எதையாவது சொன்னால், தீவிரமான பிரச்சினையில் சிக்கி இருப்பவர்கூட அதைக்கேட்டு உடனே கடகடவென சிரித்துவிடுகிறார். அவர் அப்படி ஒரு கவிதை சொன்னால் அதைக் கேட்பவர் மனதில் ஒரு புதிய உத்வேகம் பிறந்து விடுகிறது. பாடலின் இரண்டு சப்தங்களைக் கூட அப்படி பாடினால் அதைக் கேட்பவர் மனம் ஊஞ்சலில் ஆடிவிடுகிறது, மேலும் எந்தவொரு விசயத்தையும் அப்படி நகைச் சுவையாக மாற்றிவிடுங்கள். அதனால் கவலையுடைய மனிதனின் மனதில் இருந்து அது உடனே விலகிவிட வேண்டும் அதனால் யாரெல்லாம் வீண் எண்ணங்களை சிந்திக்கிறார்களோ அதன் மூலமாகவும் நிறைய சேவை நடந்து விடுகிறது என பிறருக்குத் தோன்ற வேண்டும்.

எனவே வாழ்க்கையில் எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பதற்கும் மற்றவரையும் மகிழ்ச்சியாக வைத்திருப்பதற்கும் கொஞ்சம் நகைச்சுவைக் கலையை தனக்குள் கொண்டு வருவது அவசியமாக இருக்கிறது, அதன்மூலம் ஒருவர் மற்றொருவரின் அருகில் வருகிறார். கடுப்பை அல்லது வெறுப்பை விட்டுவிட்டு சிரித்து விடுகிறார். துன்பம்-வேதனையை மறந்து ஒரு புதிய சக்தியின் பிரவாகத்தை தனது வாழ்வில் உணர்கிறார் பின்னர் ஒருவர் பிறரோடு ஒன்றாக சேர்ந்து இருப்பது எளிது என உணர்கிறார்.

எந்த மனிதருடைய வாழ்வில் மனக்கசப்பு மட்டும் இருக்கிறதோ, அவர் ஒருபோதும் எந்த சந்தர்ப்பத்திலும் சிரிப்பூட்டும் அல்லது வேடிக்கை காட்டும் கலையை எந்த வகையிலும் உபயோகப்படுத்த தெரியாதவராக இருக்கிறார். மனிதர்கள் அவரால் சலித்துப்போகிறார்கள். அவர்கள் அவரிடம் பிரியமாக இருப்பதில்லை மேலும் அவரோடு சேர்ந்து இருப்பது கடினம் என நினைக்கிறார்கள் அதாவது அப்படிப்பட்டவரிடம் இருந்து விலகி இருக்கிறார்கள். இதனால் அப்படிப்பட்ட ஒருவருக்கு, மக்கள் மத்தியில் செய்யக்கூடிய காரியங்களில் வெற்றி கிடைப்பது அரிதாகிறது. அந்தக் கலையை தன்னிடம் கொண்டுவர முடியாத குறைவினால் மக்கள் மனதை வெல்ல முடியாமல் இருக்கிறார்கள். இதயம் வறண்ட மனிதர் தனது வறட்சியின் காரணத்தால் சூழ்நிலையில் வறட்சியின் பாதிப்பை ஏற்படுத்துகிறார் அதனால் மற்றவர்கள் அவரை தங்கள் கூட்டத்தில் ஒருவராக சேர்த்துக் கொள்ள தயக்கம் காட்டுகிறார்கள். மனிதர்கள் எல்ரோரும் மனந்திறந்து பேச வேண்டும், இயல்பாக பழக வேண்டும், நட்பாக பேச வேண்டும் என்றெல்லாம் விரும்புகிறார்கள். அதற்காக சிரிப்பு மற்றும் நகைச்சுவை உணர்வுடையவர்களை தமது அருகில் வைத்துக் கொள்ள விரும்புகிறார்கள்.

நாகரீகமில்லாத, இழித்துப் பழிக்கக்கூடிய அல்லது பலவகையில் தாறுமாறாக பேசுவது அல்லது நடந்து கொள்வது எல்லாம் நகைச்சுவை ஆகிவிடாது. பரமாத்மாவின் நினைவு மறந்து போகுமளவு அல்லது இலட்சியமும், முயற்சியும் மறந்து போகுமளவு கடகடவென சிரிப்பது, ஆரவாரமாகப் பேசிச் சிரிப்பது, கேலிபேசி நையாண்டி செய்வது எல்லாம் நகைச்சுவை ஆகாது. ஆன்மீகமில்லாத சிரிப்பு மற்றும் நகைச்சுவை நேரத்தை வீணாக்கக்கூடியது, புறநோக்கை கொண்டுவருவது, சூழ்நிலையை கெடுப்பது மற்றும் தேகாபிமானத்தை கொண்டுவருவதாக இருக்கிறது. எந்தச் சிரிப்பு பிரியமான பிரபுவிடம் இருந்து விலகிப்போகச் செய்கிறதோ, யோகத்தின் உயர்ந்த நிலையில் இருந்து கீழே இறங்க வைக்கிறதோ அப்படிப்பட்ட சிரிப்பு மற்றும் நகைச்சுவை மீது ஞானி மற்றும் யோகி விருப்பம் கொள்வதில்லை. தீரம், பெருந்தன்மை, மரியாதை இவைகளோடு நல்லவிதமாக சிரிக்கவைக்க உள்ள வழிகள் - பாட்டு, கவிதை, நாடகம், கதை ஆகியவை. இவைகள் அப்படிப்பட்ட நல்ல சாதனங்களாக இருக்கிறது அது கேளிக்கை, களிப்பு, நகைச்சுவை எல்லாம் தருகிறது, அதே வேளை அது மனிதர்களை மோசமான உணர்வுகளில் உழலச் செய்யாமலும் இருக்கின்றது.

அப்படிப்பட்ட நகைச்சுவைக் கலையை வளரச் செய்வதற்கு எந்த டானிக்கையும் குடிக்க வேண்டிய அவசியமில்லை மற்றும் எந்த விதமான நகைச்சுவை துணுக்குகளையும் சேகரிக்கும் அவசியம் இல்லை மாறாக தான் எப்போதும் சந்தோஷமாக இருக்க வேண்டியது அவசியமாகும். அதனால் இயல்பாகவே மனிதர்கள் வாய்விட்டு சிரிக்கும்படியான வார்த்தைகள்

தாமே வெளிப்படுகிறது. பின்னர், பாட்டு, நாடகம், கதைகள் எல்லாம்கூட அப்படி இருக்க வேண்டும். அது வெறும் மனமகிழ்ச்சிக்கான சாதனமாக மட்டுமில்லாமல் உயிர் மூச்சு போல மனதை தனது இலட்சியத்தை நோக்கி அழைத்துச் செல்லக் கூடியதாக இருக்க வேண்டும். யாருடைய வாழ்க்கை கவலையில்லாமல் இருக்கிறதோ, வீண் எண்ணங்களில் இருந்து விலகி இருக்கிறதோ அவருக்கு தன்னுடைய இலகுவான தன்மையே அவரிடம் அப்படிப்பட்ட கலையை தானாக வரவைப்பதோடு அதை வளரவும் வைக்கிறது. அப்படிப்பட்ட மனிதரை நாம் உயர்ந்தவகை மகிழ்ச்சியின் சுபாவமுடைய மனிதர் எனச் சொல்கிறோம்.

## 16. ஆரோக்கியமாக வாழும்கலை

### (The art of healthy living)

'மனிதனுக்கு ஆரோக்கியம் போய்விட்டால் அது அவனுக்கு ஏற்பட்ட மிகப்பெரிய நஷ்டமாகக் கருதப்படுகிறது' என்ற கருத்து எல்லோருக்கும் தெரிந்ததே. ஆரோக்கியமில்லாத போது அவரது செயல்திறனில் வித்தியாசம் வந்துவிடுகிறது. உடல் பலவீனமாக இருக்கும்போது, மனிதர்கள் பல நல்ல காரியங்களைச் செய்ய விரும்பினாலும், அவைகளைச் செய்ய முடியாமல் போய்விடுகிறது. இன்னும் சொல்லப்போனால், வியாதியானது ஒருவரது அன்றாட முயற்சியிலும் பல இடர்பாடுகளை கொண்டுவந்து விடுகிறது. அவருடைய கவனம் எல்லாம் மதிப்பு மிகுந்த ஆன்மீக சேவையின் பக்கம் போகாமல் அல்லது அதில் ஈடுபடுவதற்குப் பதிலாக உடலின் பக்கம் இழுக்கப்படுகிறது. எனவே ஆரோக்கியமாக வாழ்வது ஒரு விலைமதிப்பற்ற செல்வமாக கருதப்படுகிறது.

என்றாலும் மருந்து மாத்திரைகளின் ஆதாரத்தில் உடலை நடத்துவதை ஆரோக்கியம் என்று சொல்ல முடியாது. இயல்பாகவும், இயற்கையாகவும், பிரச்சினை ஏதுமின்றி தானாக வாழ்வதே உண்மையில் ஆரோக்கியமாகும். அதற்காக வாழ்க்கையில் பலவிதமான நியமங்களைக் கடைப்பிடிப்பது அவசியமாகிறது. அனேக முற்பிறவிகளின் கர்மக் கணக்கு-வழக்குகளை முடித்து வைப்பதற்காகவும் வியாதிகள் மனிதனை ஆக்கிரமிக்கிறது. அப்போதுகூட சில மதிப்பு மிகுந்த நியமங்களை கடைப்பிடிப்பதன் மூலம் ஆரோக்கியமாக வாழ முடியும். மனிதர்களுக்கு பல வியாதிகள் அவர்களுடைய முன்னோர்களிடம் இருந்து வருகிறது அதற்கு மரபணு முக்கிய காரணமாக இருக்கிறது, விபத்துகளாலும், இயற்கை சீற்றங்களினாலும், சுற்றுச்சூழல் மாசுகளாலும் மற்றும் பொறுப்பில்லாமல் உணவுப்பொருட்களில் கலப்படம் செய்வதாலும் மற்ற பல வியாதிகள் வருகின்றன என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்கிறார்கள். செயல்களின் விளைவு சூட்சும ரூபத்தில் இவைகளெல் லாம் ஏற்பட காரணமாக அமைந்துவிடுகிறது என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை. எனினும் மனிதன் தனது ஆரோக்கியத்தை தனது செயல்கள் மூலமாகவே காத்து வருகிறான் என்பது உண்மையானால், நோயின்றி வாழ்வதற்கு பல விதிமுறைகள் இருக்கின்றன அவைகளை கடைபிடிப்பதன் மூலம் தங்களை ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள வழிவகை ஏற்படுகிறது என்பதும் சத்தியமே. அந்த நியமங்கள் அல்லது விதிமுறைகளை கடைப்பிடிப்பது கூட தன்னிடமிருக்கும் ஒரு பெரிய கலையாகும் அதை நாம் இங்கே 'ஆரோக்கியமாக வாழும்கலை' எனச் சொல்கிறோம்.

உதாரணத்திற்குச் சொல்வதென்றால், எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பது ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது. குஷியைப் போன்ற ஊட்டம் வேறேதும் இல்லை என்று சொல்லப்படுகிறது. கவலையை சிதைக்கு சமமானது என்று சொல்கிறார்கள். பயம்கூட மனிதரை மரணத்தை நோக்கி அழைத்துச் செல்லும் விகாரமாக இருக்கிறது. அது அவருடைய இருதயம், மூளை மற்றும் நரம்பு மண்டலத்தில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. கவலை மற்றும் பயத்தால் உணவு கூட சரியாக உடலில் கலப்பதில்லை மேலும் அது விஷமாக மாறி உடலை நோய்வாய்ப்பட்ட நிலைக்கு அழைத்துச் செல்கிறது. மாறாக சில மனிதர்கள் நாளுக்குநாள் தங்களை வாட்டசாட்டமாக வளர்த்துக் கொண்டும் இருக்கிறார்கள்.

அவர்கள் ஏதாவது ஊட்டச்சத்து மிக்க உணவை சாப்பிடுவதாகக்கூட வைத்துக் கொள்ளலாம். மனிதனுடைய உணவில் எல்லா வைட்டமின்களும் இருக்கலாம் ஆனால் மகிழ்ச்சி என்ற வைட்டமின் இல்லையென்றால் உடலில் வளர்ச்சி அல்லது ஆரோக்கியத்தில் குறைவு ஏற்படும். ஆனால் யாரிடம் (1) இறைவன்மீது நம்பிக்கை இருக்கிறதோ (2) எதிர்காலத்தின்மீது நம்பிக்கை இருக்கிறதோ (3) கர்மத்தின் விளைவுகளை அறிந்திருக்கிறார்களோ (4) இந்த எல்லா விசயங்களையும் அறிந்து தனது வாழ்வில் கடைபிடிக்கிறார்களோ மேலும் (5) விளைவுகளைக் குறித்து மனங்கலங்காமல் இருக்கிறார்களோ அப்படிப்பட்டவர்கள் எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பார்கள். இவைகள் எல்லாமே ஞானி மற்றும் யோகிகளுடைய லட்சணமாக இருப்பதைப் பாாக்கிறோம். அப்படிப்பட்டவர்கள் முயற்சியில் முழுமையாக ஈடுபட்டிருப்பார்கள் மேலும் கர்ம பலனைக் குறித்த கவலையை விட்டொழித்திருப்பார்கள்.

எவரொருவர் சாத்வீக உணவு உட்கொள்கிறாரோ அவருடைய ஆரோக்கியம் இயல்பாகவே நன்றாக இருக்கும். சாத்வீக உணவைப் பற்றி என்ன சொல்கிறார்கள் என்றால் (1)இறைச்சி, மது, வெங்காயம், பூண்டு, புகையிலை, உணர்வைத் தூண்டும் பொருட்கள், மற்றும் அனேக விதமான காரம் நிறைந்த மசாலா நிறைந்த பொருட்கள் முதலியவை இல்லாத (2) பழைய, கெட்டுப்போன, நீண்டநாட்களாக வைத்திருக்கும் (3) கனமான (4) தாமதமாக ஜீரணிக்கக்கூடிய பதார்த்தங்களற்ற உணவு. எந்தஉணவு, பவித்திரத்தை கடைப்பிடித்து, யோக நிலையில் இருந்து சமைக்கப்பட்டதோ, அந்த உணவே சாத்வீக உணவாகும். அது மட்டுமல்லாமல், உணவை சாத்வீக வகையை சேர்ந்தாக்க வேண்டும் என்றால் (5) சாப்பிடக்கூடிய மனிதரும் சாப்பிடும்போது யோக நிலையில் இருந்து அதை உட்கொள்ள வேண்டும். யார் யோக நிலையில் இருந்து உணவு உட்கொள்கிறாரோ அவர் (6) ஆசைக்கு வசமாகி தேவைக்கு அதிகமான உணவை சாப்பிட மாட்டார் (7) எந்த உணவு அவரது உடம்புக்கு ஒவ்வாததோ, அதையும் அவர் சாப்பிட மாட்டார் மேலும் உணவை ஒரே விதமாக (8) பிரசாதமாக (9) மன மகிழ்ச்சியோடு கவலையில்லாமல் அதை ஆரோக்கியம் தரும் உணவாக உணர்ந்து உட்கொள்வார். அப்படிப்பட்ட உணவின் மூலம் அவர் மனதில் மகிழ்ச்சி உண்டாகிறது, உடல் இலேசாக இருப்பதை உணர்கிறார் மேலும் அவர் சோம்பலுக்கு அடிமை ஆவதில்லை.

எந்த மனிதருக்கு நல்லவற்றை சிந்திக்கும் பழக்கம் இருக்கிறதோ, அவரது உடலில் தெம்பு வளையும் தன்மையும், இலேசான நிலையும் உணரப்படும்.

(1) ஏமாற்றம் நிறைந்த சிந்தனை உடையவர் (2) பிறருடைய வாழ்வில் குற்றங்குறைகளை பார்க்கக்கூடியவர் அதாவது குறைகாணும் பண்புள்ள மனிதர் (3) ஒவ்வொரு பொருளிலும் குற்றங்குறைகளைப் பார்த்து தனது பாக்கியத்தை இழக்கக்கூடிய மனிதர் (4) பிறருக்கு கடுமையான நிபந்தனைகள் விதிக்கக்கூடிய மனிதர் (5) எப்போதும் கடுகடுப்புடனும், அதிருப்தியுடனும் இருக்கும் மனிதர் இவர்கள் எல்லாம் தானே தனது ஆரோக்கியத்தை கெடுத்துக் கொள்கிறார்கள். அவர்கள் ஆரோக்கியம் என்ற சந்தன மரத்தை தாங்களே எரித்துவிட்டு, அதனை கரிக்கட்டையாக்கி விடுகிறார்கள். அவர்கள் கெட்ட எண்ணம் என்ற முட்களால் தம்மைத்தானே குத்திக்கொண்டு தாமாகவே துன்பப்படுகிறார்கள் மேலும் அதனால் தமது ஆரோக்கியத்தை இழந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், என்றாலும் அவர்களும் நற்சிந்தனை நிறைந்தவர்களாக திகழ முடியும் அதற்கு (1) எனக்கு நன்மை நடக்கவிருக்கிறது (2) என்னுடைய கரம் இறைவனின் கரத்தில் இருக்கிறது எனவே என்னுடைய எதையும் யாரும் கெடுக்க முடியாது (3) நானே இப்போது குற்றங்குறை உடையவனாக இருக்கிறேன், எனவே பிறருடைய குற்றங்குறைகளைப் பார்ப்பதென்பது என்மீது நானே மண்ணை அள்ளிப் போட்டுக் கொள்வதாகும் மேலும் (5) என்ன நடந்தாலும் நடக்கட்டும், நான் எனது செயல்களை நல்லபடியாக செய்தே தீருவேன் அத்துடன் (6) பிறருடைய குற்றங்குறைகளை பார்க்காமல் நான் எனது இலட்சியத்தை நோக்கி செல்வேன் என்ற எண்ணங்களை உறுதியாக ஏற்றுக்கொள்ள வேண்டும். எனவே ஈஸ்வரிய ஞானத்தை சரியாக தாரணை செய்வதன் மூலமாகவே மனிதனிடம் நல்ல விதமாக சிந்திக்கக்கூடிய கலை வருகிறது மேலும் நல்ல சிந்தனைகள் மூலமாக எளிதில் தன்னை ஆரோக்கியமாக வைத்திருக்கும் கலையும் வருகிறது.

எந்த மனிதர் அனுதினமும் அதிகாலை எழுந்து தனது காலைக் கடன்களை முடித்து குளித்து தியானம் முதலிய பயற்சிகளைச் செய்கிறாரோ அவருடைய உடல், மனம் இரண்டும் ஆரோக்கியமாக இருக்கும். யாருடைய உடலும், மனமும் தூய்மையாக இருக்கிறதோ அவர் நிச்சயம் ஆரோக்கியமாக இருப்பார் ஏனெனில் எங்கே தூய்மையும், பவித்திரமும், புனிதமும், களங்கமின்மையும் இருக்கிறதோ அங்கே ஆரோக்கியமாக இருப்பதில் வெற்றி கிடைத்தே தீரும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. அசுத்தமும், குணக்கேடும் ஆரோக்கியத்தை கெடுக்கக்கூடியவைகளாக இருக்கின்றன. யார் இந்த விசயங்களில் இருந்து விடுபட்டு இருக்கிறாரோ அவர் இயல்பாகவே ஆரோக்கியமாக இருப்பார்.

அடுத்து பிரம்மச்சரியம் என்பது ஆரோக்கியத்திற்கான மூலாதாரமாக இருக்கிறது. (1) அதனால் உற்சாகம் ஏற்படுகிறது, (2) உடலில் பலம் பெருகுகிறது மேலும் (3) உடல் வளர்ச்சி அடைகிறது (4) மனிதனின் மனோபலம் அதிகமாகிறது (5) அவர் பயமற்றவர் ஆகிறார் (6) தனக்குள் ஆரோக்கியத்தின் அருவி பாய்வதுபோல் உணர்கிறார் அது அவருக்குள் நிரந்தரமாக சக்தியை பரப்பிக்கொண்டே இருப்பதை உணர்கிறார் (1) யாருக்கு தேகத்தின்மீது ஆசையில்லையோ (2) தேகக் கவர்ச்சியில் இருந்து விடுபட்டிருக்கிறார்களோ, (3) தேக அபிமானத்தில் இருந்து விலகி இருக்கிறார்களோ மேலும் (4) ஆத்ம சொரூபத்தில் உறுதியாக இருந்து தன்னை இறைவனின் குழந்தையாக உணர்கிறார்களோ (5) அனுதினமும் ஞான அமிர்தத்தை குடித்து உயிர் வாழ்கிறார்களோ, அவர்களே பிரம்மச்சரிய விரதத்தை முழுமையாகக் கடைப்பிடிக்க முடியும். பிரம்மச்சரியத்தால் மனித வாழ்வில், உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகமாகிறது அதனால் அவர்கள் நோயின் தாக்கத்தில் இருந்து பாதுகாப்பாக இருக்கிறார்கள்.

யாருக்கு பிறருடைய ஆசிகள் கிடைக்கிறதோ, அந்த ஆசிகளும் உடலை ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கு உதவியாக இருக்கின்றன. தாங்கள் பெற்ற ஆசீர்வாதங்களால் தமக்கென ஒரு ஒளி மண்டலம் (auro) மனிதர்களிடம் உருவாகிறது. அந்த ஒளிமண்டலத்தால் சூழப்பட்ட ஒருவர் வியாதிகளின் தாக்குதல்களினால் துன்பப்படுவதில்லை. ஒருவேளை வியாதி வந்துவிடுமேயானால் அவர் அதிலிருந்து எளிதில் வெளிவந்துவிடுவார். யார் மனிதர்களுக்கு நல்லது செய்கிறார்களோ, மனிதர்களுடைய உயர்வைக் குறித்து சிந்திக்கிறார்களோ மேலும் அவர்களுக்கு நன்மை உண்டாக இரவு பகலாக உழைக்கிறார்களோ அவர்களுக்கே ஆசீர்வாதங்கள் கிடைக்கின்றன. அப்படிப்பட்டவர்களுக்கு எல்லோரும் மனமாற உதவி செய்ய முன்வருகிறார்கள் மேலும் எல்லோருடைய நல்விருப்பங்களும் அவருடைய வியாதியை மட்டுப்படுத்துவதற்கான சக்தியை வழங்குகின்றன.

யார் எந்த அளவு யோகத்தில் அதிகமாக இருக்கிறார்களோ அந்த அளவு வியாதியில் இருந்து விடுபட்டு இருக்கிறார்கள். சொரூபத்தில் நிலையாக இருப்பதே யோகமாகும் மேலும் தன்னில் நிலையாக இருப்பதையே ஆரோக்கியம் என்று சொல்லப்படுகிறது. எனவே சுயத்தின்மீது நிலைத்திருந்து ஆரோக்கியம் பெறுவதே இயல்பானதாகும். யோகத்தில் இருப்பதன்மூலம் மனிதர்களுடைய செயல் தேர்ச்சி அடைகிறது. ஏனெனில் அவர்களது உடல் எப்போதும் ஆரோக்கியமாக இருக்கிறது. யோகத்தின் பலனாக மனிதர்களுக்கு இருபத்தியோரு பிறவிகள் வரை உறுதியான உடல் கிடைத்துவிடுகிறது. அதனால் அவர்கள் பலவீனங்கள் மற்றும் வியாதிகளால் பாதிக்கப்படாமல் இருக்கிறார்கள்.

யாரொருவர் ஈஸ்வரிய சேவையில் ஈடுபட்ட வண்ணம் இருக்கிறாரோ, அவருக்கு ஈஸ்வரிய உதவி கிடைத்துக்கொண்டே இருக்கிறது. அந்த உதவியின் மூலம் அவர் தமது உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்வதற்கு வாய்ப்பு கிடைக்கிறது. சேவை செய்யும் மனிதரது உடல் தனக்காக இல்லாமல், ஜனங்களுக்காகவே இருக்கிறது மேலும் பொதுஜன சேவை செய்யக்கூடிய மனிதர் இறைவனின் அன்பை பெறுகிறார் மேலும் யார் இறைவனின் அன்பைப் பெறுகிறார்களோ, அந்த அன்பு ஆரோக்கியமாக வாழ்வதற்கு அல்லது வியாதியில் இருந்து விடுபடுவதற்கு தேவையான சக்தியைத் தருவதாக இருக்கிறது.

இப்படியாக ஈஸ்வரிய ஞானம், யோகம் அல்லது சேவை முதலியவைகளால் மட்டுமே மனிதனிடத்தில் ஆரோக்கியமாக வாழும் கலை உருவாகிறது. அப்படிப்பட்டவரது நல் எண்ணங்கள் பிறருக்கும் ஆரோக்கியத்தை தர வல்லதாக இருக்கிறது.

இப்போது நான் எந்த பதினாறு கலைகளைப் பற்றி எழுதியிருக்கிறேனோ, அந்தக் கலைகளை சிறந்த முறையில், பிரஜாபிதா பிரம்மா பாபாவின் வாழ்க்கையில் நான் பார்த்திருந்தேன். அவரிடம் இந்த பதினாறு கலைகள் வளர்ந்து வளர்ந்து அவர் தானே ‘பதினாறு கலை முழுமை பெற்றவராகி’ விட்டார்.

.:.:.:.:.:.:.:.:.:.:.:.:.:.:.:.:.:.:.:.:.:.

மகிழ்ச்சி

மகிழ்சி